# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008

பதிவு இலக்கம் : 361910

காற்று : 10 சுகந்தம் : 37 (சித்திரை - ஆனி) 2018




தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!


மின் தடைப்பட்டாலும் குளிர்ச்சியை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள LG பவர்கட் குளிரூட்டி
LG
Life's Good
7
மின் தடையேற்பட்டாலும்
மணித்தியாலங்கள்
தடையின்றி குளிர்ச்சியாய் வைத்திருக்கும்
மின் தடையானாலும்
எவர்கூல்
புதிய அறிமுகம்
AD/020
(நிபந்தனைகளுக்குட்பட்டது. முன்னறிவித்தல்களின்றி விலைகள் மாற்றப்படலாம்.
இங்கு காட்டப்பட்டுள்ள உருக்கள் நிஜத்திலும் வேறுபடலாம்.)
தொடர்புகளுக்கு....
அபான்ஸ் காட்சியறை, 263, 265, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 065-2227895
Abans

ஆரம்பம் : 06.04.2008

# தென்றல்
# THENDRAL



44/I, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

தொ.பே : 077 - 6983597

பெக்ஸ் : 065 - 2227542

Email:- kirupabatticaloa@yahoo.com

இணையம் :- www.thendralbook.com

**ஆசிரியர்**

க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**

கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை

கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை

திருமதி. கவிதா.கிருபாகரன்

கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்

செல்வி. த.செல்வராணி

**ஓவியம்**

வே. ஹோகுலரமணன்

**கணனி வடிவமைப்பு**

யோ. மிருணாளினி



**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)**


## 10 ஆவது ஆண்டில் "தென்றல்"

இதழியல் வரலாற்றில் தனக்கென தனியிடத்தை வைத்துள்ள "தென்றல்" சஞ்சிகை 10ஆவது ஆண்டில் 06.04.2018 அன்று காலடி எடுத்து வைத்திருக்கிறது.

ஊடகத்துறையில் "தென்றல்" சஞ்சிகை உள்ளூரில் மாத்திர மல்லாமல், உலக நாடுகளிலுள்ள தமிழர்களும் அதன் நாமத்தை உச்சரிக்கும் அளவுக்கு ஆல விருட்சம் போல் வளர்ந்துள்ளது. ஒரு சஞ்சிகை நடத்து வதும், ஒரு குடும்பத்தை நடத்து வதும், சிரமமான காரியம் தான். காலாண்டு, வருடாந்தம் என ஆயிரம் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்தே ஒரு சஞ்சிகையை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் உங்கள் "தென்றல்" சஞ்சிகையும் பலவித இடையூறுகளைத் தாண்டி, எமது அன்பான வாசகர்கள், எழுத்தாளர்கள், உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள்,

அனுசரணையாளர்களின் அரவணைப்பினாலேயே இந்த இமாலய இலக்கை எட்ட முடிந்தது எனக் கூறினால் அது மிகையாகாது.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தின் அடிப்படையில், உங்கள் **"தென்றல்"** சஞ்சிகை தனது நீண்ட நெடிய பயணத்தைத் தொடர்ந்து செல்கிறது. எம் அன்பான வாசகர்களும், அனுசரணையாளர்களும் எம்மோடு இணைந்து கைகோர்த்துப் பயணிக்கும் வரையில் **"தென்றல்"** சஞ்சிகையின் பயணம் இன்னும் பல ஆண்டுகளைக் கடந்து செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**என்றென்றும் அன்புடன்**
**–ஆசிரியர்–**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 450/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும். தொன்மையான தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றை பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும்போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

# மண்ணும் பொன்னும்

"வீசு தென்றல்" ஆ. அரசரெத்தினம்

உலகில் உள்ள தொன்மையான இனிமையான செம்மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகத் திகழ்வது தமிழுக்கும் தமிழருக்கும் பெருமையாகும். இப்பெருமையை தமிழ்மொழி பெற்றுக் கொள்வதற்கு பல காரணிகள் துணையாய் உள்ளன. தமிழ் மொழியின் தொன்மை இலக்கிய, இலக்கணப் பெருமை, இனிமை என்பனவும் இக்காரணிகளுள் அடங்கும். உலகிலுள்ள மொழிகளுள் தமிழ்மொழி மிகத்தொன்மையானது என்பதனை இன்றுள்ள மொழியியல் ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர். தமிழ் மொழியிலுள்ள வேர்ச் சொற்கள் (அடிச்சொற்கள்) ஏனைய மொழிகள் பலவற்றுள்ளும் காணப்படுவதை நிரூபித்துள்ளனர். அவ்வாறே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களும் மிகவும் பழைமையான காலத்தவை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு அவை பரந்து விரிந்துபட்டும் காணப்படுகின்றன. இந்நூல்களில் காணப்படும் விழுமியக் கருத்துக்களை பிறமொழியாளர்களும் ஏற்று, போற்றுகின்றனர். இவற்றுள் தமிழ் இலக்கணம் தமிழ் மொழியை இளமை குன்றாது பேணிப் பாதுகாத்து வருகின்றது எனலாம். எனவே இலக்கண விதிகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

தமிழ் மொழியை இனிமையான மொழி என்றும் பெருமையோடு சொல்கின்றோம். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை **"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்"** என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் சுவாமிகளை **"பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவர்"** என்று பாராட்டுகின்றனர். மணிவாசகப் பெருமான் பாடிய **"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்"** என்பார்கள். தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது, வடமொழி,

ஆங்கிலம் முதலிய பல மொழிகளை அறிந்தவரான எட்டயபுரம் சுப்பிரமணிய பாரதியார் **"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"** என்று பாடினார்.பன்மொழிப் புலவரான தனிநாயகம் அடிகளாரும் தமிழின் இனிமை, பெருமை பற்றி பேசினார். உலக மக்களை மண், பெண், பொன் என்ற மூன்றும் பெரிதும் கவர்ந்திழுத்தன. இதனால் தமிழ் இலக்கணம் இயற்றிய இலக்கண நூலோரும் இச்சொற்கள் பற்றி கவனம் செலுத்தியுள்ளனர். பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் சூத்திரத்தில்,

**"ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்**
**இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்**
**கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே"** (நன் - 209) என்று கூறப்பட்டுள்ளது.

இச்சூத்திரத்தின் பொருள் என்னவென்றால் ண், ன் ஆகிய மெல்லின மெய்யெழுத்துகள் நிலை மொழியின் ஈறாக வந்து வருமொழியின் முதலில் வல்லெழுத்துக்கள் வந்தால் **"ண்" என்பது "ட்" ஆகவும் "ன்" என்பது "ற்"** ஆகவும் மாறும்.வருமொழி முதலில் மெல்லினம் அல்லது இடையினம் வந்தாலும் அல்வழிப் புணர்ச்சியின் போது வருமொழியில் எவ்வெழுத்து வந்தாலும் இயல்பாகவே புணரும் என்பதாகும்.

சிறுகண் + களிறு = சிறுகட்களிறு
கண் + பொறி = கட்பொறி
மண் + குடம் = மட்குடம்
பொன் + தகடு = பொற்றகடு
பொன் + காப்பு = பொற்காப்பு
பொன் + தாலி = பொற்றாலி

இவ்வுதாரணங்களில் பொற்றாலி என்பது பொன்னால் ஆகிய தாலி என **"ஆல்"** உருபு பெற்றுள்ளதைக் காணலாம்.

மண் + ஞாற்சி = மண்ஞாற்சி (ஞாற்சி என்பதன் பொருள் தொங்குதல்)
விண் + ஞாயிறு = விண்ஞாயிறு
மண் + நன்று = மண்நன்று
விண் + மண் = விண்மண்
கண் + வளர்தல் = கண்வளர்தல்
பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி
பொன் + நன்று பொன்நன்று
பொன் + மாட்சி = பொன்மாட்சி

பொன் + யாப்பு = பொன்யாப்பு
பொன் + வன்மை = பொன்வன்மை
பொன் + யவனர் = பொன்யவனர்
பொன் + வண்டு = பொன்வண்டு

மெல்லினமும், இடையினமும் வருமொழி முதலில் வந்த போது இயல்பாகப் புணர்ந்துள்ளன.

நிலைமொழியின் இறுதியில் **"ண்"**, **"ன்"** மெல்லின மெய் எழுத்துகளோடு வருமொழி முதலில் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய எழுத்துக்கள் வந்து அல்வழிப் புணர்ச்சியாக புணரும் போது இயல்பாகப் புணரும்.


மண் + கடிது = மண்கடிது
மண் + சிறிது = மண்சிறிது
மண் + தீது = மண்தீது
மண் + பெரிது = மண்பெரிது
மண் + நீண்டது = மண்நீண்டது
பொன் + ஞான்றது = பொன்ஞான்றது
பொன் + யாது = பொன்யாது
பொன் + வலிது = பொன்வலிது என்ற உதாரணங்களைப் பொருத்திப் பார்க்கவும்.

நிலைமொழி ஈற்றில் **"ண்"**,**"ன்"** ஆகிய எழுத்துகளை உடைய சொற்களுடன் வருமொழி முதலில் உயிரெழுத்துகளை உடைய சொற்கள் புணரும் போது இயல்பாகவே புணரும். கண் + அழகு = கண்ணழகு, பொன் + அழகு = பொன்னழகு என்றவாறு புணர்த்தி எழுதுக. நிலைமொழி ஈற்றில் உள்ள மெய் எழுத்துகளோடு வருமொழி முதலில் உள்ள உயிர் எழுத்து சேர்ந்து உயிர்மெய் எழுத்தாக மாறி புணர்வதும் இயல்பு புணர்ச்சியேயாகும். இதனையே **"உடன்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே"** என்ற சூத்திரத்தால் நன்னூலார் தெளிவுபடுத்தினார். மண்குடம், பொன்தாலி என்றவாறு எழுதுவதைத் தவிர்த்து மட்குடம், பெற்றாலி என எழுதி தமிழ் இலக்கணம் பேணி தமிழ் மொழியைக் காத்து வளர்ப்போம். இலக்கண விதிகளை நிலைநிறுத்தும் போது பொதுச் சூத்திரம், சிறப்புச் சூத்திரம், புறனடைச் சூத்திரம் என்ற வகையில் முக்கியத்துவம் கொடுப்பதே இலக்கண முறையாகும். பொதுச் சூத்திரம், சிறப்புச் சூத்திரம் என்பவற்றுள் அடக்க முடியாதவற்றை புறனடைச் சூத்திரத்துள் கூறியிருப்பின் அதனையே துணிபாக கொள்ள வேண்டும்.

– க.கிருபாகரன் –



# தென்றலின் தேடல்



## கார்த்திகேசு சிவலிங்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை எழில் கொஞ்சும் பாலமீன்மடுவில் பிறந்து, தனது பவளவிழா ஆண்டில் கால் பதித்து, இலக்கிய உலகில் கவிதை, நாடகம், குறுந் திரைப்படங்கள், சிரிகதைகள், பாடல் எனப் பல்வேறு துறைகளில் தனது பன்முக ஆற்றலால் தடம் பதித்த- பதித்துக் கொண்டிருக்கும் கார்த்திகேசு சிவலிங்கத்தைத் "தென்றலின் தேடல்" வாயிலாக வெளிக் கொணர்வதில் "தென்றல்" பெருமை கொள்கிறது.

### குடும்பப் பின்புலம்

இவர் 31.08.1943 ஆம் ஆண்டு பாலமீன்மடுவில் பிறந்து, நொச்சி முனையைச் சேர்ந்த பாக்கியலெட்சுமியை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு, அதன் பயனாக மூன்று பிள்ளைகளைப் பெற்று, தற்போது மட்டக்களப்பு நகரில் வசித்து வருகிறார்.

### தொழில்

வாழைச்சேனை காகித ஆலையில் கணக்காளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

### ஈடுபாடான துறைகள்

#### நடித்த குறுந் திரைப்படங்கள்

- கலைக்கோட்டன் அ.இருதயநாதனின் நெறியாள்கையில் 2014 ஆம் ஆண்டு ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒலிபரப்பான **"ஒரு சின்ன முத்தம்"**.

இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய – இசை – நாடக – நாட்டிய – கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- தேவ. அலோசியஸின் நெறியாள்கையில் 2017ஆம் ஆண்டு வெளியான **"50 ரூபாய்"**.

**எழுதி மேடையேற்றப்பட்ட நாடகங்கள்**

- 1963 இல் கிரானில் மேடையேறிய **"பாசம்"**.
- 1964 இல் வந்தாறுமூலையில் அரங்கேறிய **"வினை ஏன் விதைத்தாய்?"**.
- 1965 இல் பாலமீன்மடுவில் களங்கண்ட **"துப்பாக்கி முனையில்.."**.
- 1966 இல் பாலமீன்மடுவிலும், 1970 இல் திருப்பழுகாமத்திலும் அரங்கேறிய **"மாமா எனக்கொரு மச்சான்"**.
- 1971 இல் வாழைச்சேனையில் களங்கண்ட **"காதலும் கெசுவலா"**.

**கவிதை**

**கவிதைகள் வெளிவந்த நாளிதழ்கள்**

- தினகரன்
- சுடர்ஒளி
- வீரகேசரி
- தினமுரசு
- மெட்ரோ நியூஸ்
- ஈழநாதம்
- கனடா வெளியீடான ஆதவன்.

**சிற்றிதழ்கள்**

- "தென்றல்"
- "சுவைத்திரள்"
- "செங்கதிர்"
- "கிழக்கொளி"
- "இருக்கிறம்"
- "ஜீவநதி"

- "கவிஞன்"
- "கதிரவன்"

**பாடலாக்கம்**

**இறுவட்டில் வெளியிடப்பட்ட பக்திப் பாடல்கள்**

- 2014 இல் வெளியான திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய கும்மிப் பாடல்கள்.
- 2017 இல் களங்கண்ட பாலமீன்மடு ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் கும்மிப் பாடல்கள்.

**சிரிகதைகள்**

- 2010 ஆம் ஆண்டில் **"சுவைத்திரள்"** சஞ்சிகையில் வெளியான **"அந்த நாள் ஞாபகம்".**
- 2011 ஆம் ஆண்டு **"கதிரவன்"** சஞ்சிகையில் வெளியான "பொன்னாடை". 2012 ஆம் ஆண்டில் களங்கண்ட **"அரணையும் தரையும்".**
- 2012 ஆம் ஆண்டு **"செங்கதிர்"** சஞ்சிகையில் களங்கண்ட "மாப்பிளைத் தோழன்"

**கட்டுரைகள்**

- 1993 ஆம் ஆண்டு இந்து கலாசார திணைக்களத்தின் வெளியீடான **"கோபுரம்"** சஞ்சிகையிலும், **"தினகரன்"** பத்திரிகையிலும் வெளியான **"ஓம் ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் சுவாமிகளும், திராய்மடு முருகன் ஆலயமும்"**
- 2009 ஆம் ஆண்டு **"வீரகேசரி"** பத்திரிகையில் வெளியான **"சடையப்பர் சுவாமிகளும், திராய்மடு திருத்தலமும்".**
- 2014 ஆம் ஆண்டு **"வீரகேசரி"** பத்திரிகையில் வெளியான **"பிரதம குரு வைகுந்தராசா சுவாமிகள்".**
- 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மாதா மாதம் **"சோதிட கேசரியில்"** வெளியாகிக் கொண்டிருக்கும் **"திராய்மடுவின் சடையப்பர் சுவாமிகளும், முருகன் திருத்தலமும்".**

**வெளியான நூல்கள்**

- 2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட **"முகம் காட்டும் முழுநிலா"** - கவிதைத் தொகுப்பு.

- 2009 ஆம் ஆண்டு களங்கண்ட "சடையப்பர் சுவாமிகளும், திராய்மடு திருத்தலமும்".

**பெற்ற விருதுகள்**

- 2009 ஆம் ஆண்டு "கலாசார அலுவல்கள் திணைக்களம்" வழங்கிய "கலாபூஷணம் விருது"
- 2010 ஆம் ஆண்டு "மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை" வழங்கிய "தேனகக் கலைச்சுடர் விருது".
- 2014 ஆம் ஆண்டு "இயக்குனர் இமயம் பி.பாரதிராஜா" வழங்கிய "கலைஞர் கௌரவ விருது".
- 2015 ஆம் ஆண்டு "லக்ஸ்டோ மீடியா நெற்வேக் சிறிலங்கா அமைப்பு" வழங்கிய "கலைமாமணி விருது".
- 2015 ஆம் ஆண்டில் "கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்" வழங்கிய "வித்தகர் விருது"

**போட்டிகளில் பெற்ற பரிசில்கள்**

- 1962 ஆம் ஆண்டு "சிவானந்தா வித்தியாலய கலைக்கழகத்தினால்" நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றார்.
- "அகிலம் சஞ்சிகையும்", "கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றமும்" இணைந்து நடாத்திய போட்டிகளில் 2015 ஆம் ஆண்டு - "நாடக எழுத்தாக்கத்தில்- முதற்பரிசு".
- 2017 ஆம் ஆண்டில் "இரண்டாம் பரிசு".
- அதே ஆண்டில் கவிதைப் போட்டியில் "முதல்பரிசு".
- "கலாசார அலுவல்கள் திணைக்களமும்", "மண்முனை-வடக்கு பிரதேச செயலகமும்" இணைந்து நடாத்திய போட்டிகளில் "பாடலாக்கப் போட்டியில்" 2014 ஆம் ஆண்டு "இரண்டாம் பரிசும்", 2015 ஆம் ஆண்டு "மூன்றாம் பரிசும்" பெற்றார்.
- "சிறுவர் கவிதைப் போட்டியில்" 2014 ஆம் ஆண்டு தமிழில் "மூன்றாம் பரிசும்", ஆங்கிலத்தில் "முதற்பரிசும்" பெற்றார்.

**நேர்காணல்கள் வெளியான ஊடகங்கள்**

- 2007 ஆம் ஆண்டு "நேத்திரா தொலைக்காட்சியின் உதய தரிசனம்".
- 2015 ஆம் ஆண்டில் இணையம்.



**அங்கம் வகிக்கும் அமைப்புக்கள்**

- மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர்.
- பாலமீன்மடு ஸ்ரீ சித்திவிநாயகர் கலாமன்றப் பொருளாளர்.
- புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்ற செயற்குழு உறுப்பினர்.

**பங்குபற்றிய கவியரங்குகள்**

- 2007 ஆம் ஆண்டு தைப்பொங்கல் விழாவினையொட்டி இலங்கை நேத்திரா தொலைக்காட்சியில் இடம்பெற்ற **"கவிதைப் பொங்கல்".**
- புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தால் நடத்தப்பட்ட நிகழ்வுகள்..
- மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்ட வித்துவான் தமிழ் ஒளி க.செபரெத்தினம் மற்றும் மூத்த எழுத்தாளர் இரா.நாகலிங்கம் (அன்புமணி) ஆகியோரது நினைவுதின நிகழ்வில்.

இவ்வாறாக கவிதை, பாடல், குறுந் திரைப்படம், சிரிகதைகள் எனப் பல்வேறு துறைகளிலும் தனது பவளவிழா ஆண்டில் அகலக்கால் ஊன்றி, இலக்கியப் பணியாற்றி வரும் கலாபூஷணம் கா.சிவலிங்கத்துக்குத் **"தென்றல்"** இவ்வேளையில் பவளவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அத்தோடு எதிர்காலத்தில் இவரால் வெளியிடப்படவுள்ள நூல்கள் மற்றும் இறுவட்டுக்களைப் பிரசவிக்கத் தனவந்தர்களும், புலம்பெயர் தமிழர்களும் முன்வர வேண்டுமெனத் **"தென்றல்"** கேட்டுக் கொள்கிறது.

- கவிதை -

- ஆரையூர் அருள் -


# பத்தாண்டாக புத்தாக்கமோடு வீசு "தென்றல்" வாழ்க!

இரண்டாயிரத் தெட்டுநாள் காறில் உற்பவமாகி
இன்று பத்தாண்டு நிறைவாகி - நன்றாய்
பல்சுவை குடும்பச் சஞ்சிகையாய்ப் பரிணமித்து
நற்சுகந்தமோடு நாடியெங்கும் வீசுகிறது..!

தங்குதடையின்றி பொங்குசுவைப் பாலாகி
நல்லிதய வாசக ரனைவர்க்கும் - சத்தாகி
முத்தான மாணவர்க்கு முழுமையா யறிவூட்டி
தித்திப்பாய்த் "தென்றலது" வீசுகிறது..!

நம்நாடு கடந்து பற்பல நாடுகளுக் கேகி
செந்தமிழ ருள்ளமெலாம் சென்றவர் - சித்தம்
நித்தம் குளிரவீசி மணம் பரப்பும்
அற்புதத் "தென்றல்" ஆண்டுதோறும் வாழ்க..!!!





## விபுலானந்தரின்

# சமரச சமத்துவ சமூகப்பணி !!!

-பல்கலை மாமணி ஆரையூர் அருள்-

**மொ**ழிப் பாகுபாடோ, மதப் பாகுபாடோ, இனப் பாகுபாடோ, பிரதேசப் பாகுபாடோ சிறிதுமின்றி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ், அறிவியல், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, கல்வி மேம்பாடு, மொழி பெயர்ப்பு,மேடைப் பேச்சு, சஞ்சிகையாக்கம், விமர்சனம், சமூக சேவையெனப் பரந்த துறைகளில் அகலக்கால் பதித்து, சேவையாற்றிப் பன்மொழிப் புலவராய் விளங்கிய பல்துறைசார் விற்பன்னர், மகாபுருஷர், வித்தகர், முத்தமிழ் முனிவர் சுவாமி விபுலானந்தரான மாமேதை உலகில் தோன்றிய தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி,அனைவருக்கும் கிடைத்த மாபெரும் பண்பாட்டுக் கலைப் பொக்கிச' – ஓர் அற்புதமான அவனியின் முதுசமாகும் - – என்பதனை எவரும் மறுக்கவோ, மறுதலிக்கவோ முடியாதென்பது தெளிந்த தீர்க்கமான உண்மையாகும்.

இந்தியாவிலே கல்கத்தாவில் ஊற்றெடுத்த இராமகிருஷ்ண அருவி.விவேகானந்தர் என்ற கிளையாகி, விபுலானந்தர் என்ற உப கிளையாகிக் - கிழக்கீழத்தை நோக்கிப் பாய்ந்து, மிகவும் வழப்படுத்தி, ஒரு சமூதாயப் புரட்சியை உருவாக்கியது. ஆம், விபுலானந்தரைப் பற்றிக் கூறும்போது இலக்கியவாதி, கல்விமான், பத்திரிகை ஆசிரியர், சமயப் பெருமகன், பாடசாலை நிருவாகி என்றும் - மதங்க சூளாமணி, யாழ்நூலை ஆக்கியவ ரென்றும் பெருமையோடு தரிசிக்கிறோம். இவை எல்லாவற்றிற்கும் சிகரமாக அவர் ஆற்றிய சமரச சமத்துவ சமூகப்பணி ஒரு பெரும் சமூதாயத்தை

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தெழும்பச் செய்துள்ளதென்று கூறினால் அது மிகையாகாது. அவர் வாழ்ந்த காலத்தில் மக்கள் அந்நியர் ஆட்சியின் கீழ் அடிமை வாழ்வு வாழ்ந்ததினால் தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று முற்றாக மறைந்து விட்டன. இப்பெருங் குறையை நிவர்த்திக்கவும், மாணவரிடையே தேசிய உணர்வை விதைக்கவும் - பாரதியாரின் தேசிய கீதங்களையும், விவேகானந்தரின் பிரசங்கங்களையும் - வித்தகர் விபுலானந்தர் பயன்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அன்னாரின் பணிகளைக் கல்விப்பணி, கலாசாரப்பணி, இலக்கியப் பணி என்று வெவ்வேறாகப் பிரித்த போதும், அவரின் சமரச சமத்துவ சமூகப்பணி பற்றி ஆராயும் போது, அவரது கல்விப் பணிகளும், இலக்கிய - கலாசாரப் பணிகளும் சமூகப் பணிகளுள் அடங்கி விடுகிறது.

அவரின் சமரச சமத்துவ சமூகப் பணிகளினால் ஒரு தாய் மக்கள் நாமென்றும், மறுதாய் மக்களை மதிப்போமென்றும், சிறுமை ஒழிக்க ஒன்றிணைவோமென்றும், வறுமைப் பேயை உழைப்பால் விரட்டு வோமென்றும், இறைவனை என்றும் வணங்கி, இனிய நம் தமிழை வளர்ப்போமென அறைகூவித் தூங்கிக் கிடந்த ஒரு சமூதாயத்தை வீறு கொள்ளச் செய்தார். ஆதித் தமிழன் சேதி சொல்லும் வரலாற்றில் பாதியில் முளைத்தெழுந்த சாதிக் கொடுமைகளைச் சாடித் தகத்தெறிய, தாழ்ந்த சமூதாயத்தை மேம்படுத்தும் மருந்து கல்விதானென்று ஏழைகளுக்கும் கல்வி புகட்ட வழிவகுத்தார். திக்கற்ற அனாதைகளுக்கு புகலிடம் கொடுத்து, நிலையான எதிர்காலத்தை உருவாக்கினார். மனித குலமென்றும் மாடியில் வாழ்வோரும், குடிசையில் துவள்வோரும் கூடியே வாழ்ந்தால் வாடிய நெஞ்சங்கள் மலர்ந்து, மணம் வீசுமென்றும், தீண்டப்படாதவர்கள் என்று ஒடுக்கப்பட்ட, திருவேட்களச்சேரி வாழ்ந்த தெருவோர மக்களுக்கு பாலகர் பயிலப் பள்ளிகள், வளர்ந்தோர் கற்க இரவுப் பள்ளிகள் அமைத்து, இலவச நூல்கள் வழங்கி, நல்லாசிரியர்களை அமர்த்திக் கல்வியளித்து, சேரிவாழ் மக்களுடன் சமபந்தி ஏற்று, உண்டு உறங்கி, கேள்வியுற்ற பார்ப்பனர்கள் வசை மொழிகள் பொழிய, எது வரினும் வருக! அல்லது போயினும் போக! என அடிகளார் அஞ்சாது சேவைகளைத் தொடர்ந்தார்.

பிரதேச வாதம் எனும் குட்டையில் மூழ்கி, மனித நேயத்தை அட்டைகளாக

உறிஞ்சிய மனித வர்க்கத்தைப் பிரித்து வைத்த துவேசச் சுவர்களைத் தகர்த்தெறிந்து, பிரதேச எல்லைகளைத் தாண்டி, ஏழைச் சிறார்களுக்கு ஏற்றம்மிகு கல்வியளித்து, வாழ்நாள் எல்லாம் உழைத்து வாழும் வழிசமைத்து, சிவானந்தா வித்தியாலயமும், சிவபுரி ஆச்சிரமும், மாணவர் இல்லமும் நிறுவி, விவேகானந்தா பெண்கள் பாடசாலையும், பெண்களுக்கான தனி இல்லமும் கல்லடியில் நிறுவியதோடு, பிறந்த ஊரான காரைதீவில் சாரதா பெண்கள் கல்லூரியும் - மாணவியர் இல்லமும் அமைத்து, அநாதைகளுக்கு அறிவொளியேற்றி, யாழ்.நகரில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும், திருகோணமலையில் இந்துக் கல்லூரியையும், உயர் கல்விக்காக இராமகிருஷ்ண சங்கத்தில் இணைத்து உயிரூட்டி, மலையகத்தின் லுணுகலையிலும் மற்றும் பல கிராமங்களிலும் பல பாடசாலைகளை அமைத்து, சமரச சமத்துவத்தோடு சகலரும் வாழ வழிவகுத்தார்.

விபுலானந்த அடிகளார் துறவறம் பூணுமுன் சித்தாந்தியாகவும், துறவறம் பூண்ட பின் வேதாந்தியாகவும், பின் நற்சமரச சன்மார்க்க வாதியாகவும் செயற்பட்டு, தன்மதம் - பிறமதம் என்றொன்றுமில்லை. எம்மதமும் நம்மதமே. இதனால் எவரும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக மதம் மாற வேண்டியதில்லை. அனைத்து மதங்களையும் அனைவரும் மதிக்க வேண்டும். எமது தத்துவம், வரலாறு, இதிகாசம், கலாசாரம், இலக்கியம் முதலியவற்றின் சிறப்புக்களை ஆங்கில மக்கள் அறிந்து போற்றும் வண்ணம் ஆணித்தரமான, கட்டுரைகள் மூலமும், கீழைத்தேயப் பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் அவர் **"பிரபுத்த பாரத"** என்னும் ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த போது, எழுதிச் சமூகப் பணிகளில் மற்றொரு முக்கிய பங்களிப்பைச் செய்ததோடு, சிங்கள மாணவர்களுக்கும் - ஆசிரியர்களுக்கும் பல்கலைக்கழகத்திலே முதன் முதல் தமிழ் வகுப்புக்களை தொடங்கியவர்- ஈழத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியரான விபுலானந்த அடிகளாரே. இதனால் மேலைத்தேய பண்பாட்டம்சங்களை கீழைத்தேயம் புரிந்திடவும் - கீழைத்தேய பண்பாடு, கலாசாரம், ஆன்மீக முதுசத்தை மேலைத்தேயம் கற்பதன் மூலமே இவ்வுலகெங்கும் அன்பு, இரக்கம், மனோபக்குவம், நீதியினாட்சி, அமைதி ஆகியவை நிலை நாட்டப்படும். எதையும் போதிப்பதை விடச் சாதித்துக் காட்ட வேண்டுமென்ற அடிகளாரின்

அடிப்படைக் கொள்கைகளை அவரே வாழ்ந்து காட்டியதால், இந்துக்கள் மட்டுமல்ல - இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், ஆங்கிலேயர்கள் சமய எல்லைகளைக் கடந்து உவப்புடன் ஏற்றுப் போற்றினர்.

அவரின் தன்னலம் கருதா சமரச சமத்துவ சன்மார்க்க சமூகப் பணிக்கு எடுத்துக் காட்டாக சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்ற முஸ்லீம் மாணவர்கள் வழிபாடு செய்வதற்கும், இஸ்லாம் மதத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு மௌலவிகளையும் நியமித்துக் கொடுத்தார்.

பன்முகச் சேவைச் செம்மல் சமூகப்பணி முடித்துச் சமாதியடைந்ததும், இந்துமதத் துறவியின் இறுதிக் கிரியைகளில் பல மதத்தினரும், பல இனத்தினரும் கலந்து கொண்டு, பல மொழிப் பிரார்த்தனை செய்து, ஆறாத் துயரில் மூழ்கியமை அவரின் சமரச சமத்துவ சமூகப் பணியை வெள்ளிடை மலையாக விளக்குகிறது. அன்றியும் அவரின் அளப்பரிய சேவையை அடியொற்றி ஆற்றுதற்கு சமாதியடைந்த பின்பும் ஈழத் திருநாட்டின் ராமகிருஷ்ண சங்கத் துறவிகள் பரம்பரையான சுவாமி நடராஜானந்தாஜீ, சுவாமி ஜீவானந்தாஜீ, சுவாமி அஜராத்மானந்தாஜீ போன்ற மனித குலத் தெய்வங்கள் வித்தகர் விபுலானந்தர் தூவிய ஆன்மீக வித்திலிருந்து அரும்பி, விழுதாகி, ஆலவிருட்சமாய்க் கிளை பரவி, அரும்பணி தொடர, உந்துசக்தியானவர் அடிகளாரே. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயர் மரபில் தோன்றி, சாதி, மத, பிரதேச எல்லைகளைத் தாண்டி, மனித நேயமும் - தெய்வீகமும் கலந்த மனிதராக இதயத்தில் ஊன்றி, தனித்து நின்று சமரச சமத்துவ சன்மார்க்க சமூக சாதனை புரிந்த மனித குலத் தெய்வமே எங்கள் விபுலானந்த அடிகள் என்பதனை சகலரும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

"வித்தகன் விபுலன் இத்தரை உதித்ததால், சத்தியம் துளிர்த்து, வித்தைகள் மிளிர்ந்தது, உத்தமக் கலைகள் உயிர்த்தது, சமரச சமத்துவப் பணிகள் தளைத்தன".

**சந்தாதாரர்களே.......**

2018 ஆம் ஆண்டுச் சந்தாப் பணமான ரூபாய் 450.00 ஐ காலதாமதமின்றி அனுப்பித் **"தென்றலின்"** தொடர் வருகைக்கு உதவுங்கள். (ஆ-ர்)

-கவிதை-



# சித்திரை நாள் நிறைவைத் தேக்கும்..!!!

-கவிஞர் நிலா தமிழின்தாசன்-

சித்திரைநாள் வந்ததெனச் சிறார்கள் நெஞ்சில்
சிறப்பான புத்தாடைக் கனவு விஞ்சும்
எத்தனை தானுழைத்தாலும் மக்கள் பாடு
இருள் சூழ்ந்த நிலையென்று உள்ளம் வாடும்
அத்தனையும் இலவசமாய்த் தருவோமென்று
அரசிலார் பொய்யுரைத்துப் போவார் வென்று
சத்தியமாய்ச் சித்திரைநாள் வரவு கண்டு
தவிக்கின்றார் ஏழைமக்கள் எது செய்வோமென்று..!

நாடெங்கும் அதிவேகப் பாதை நீளும்
நல்ல நல்ல வாகனங்கள் விரைந்து ஓடும்
காடழித்துக் குடியேற்றம் மிக நடக்கும்
கட்டிவைத்த வீடனைத்தும் படை சிரிக்கும்
கோடை வெயில் கொட்டும்மழை வாழுங் கொட்டில்
குலைந்து விழ அகதிமக்கள் துயரக் காட்டில்
கூடிவரும் சித்திரைநாள் இவர்கள் வாழ்வில்
குதூகலத்தைக் கூட்டிவரும் நாளெந் நாளோ...?

பரம்பரையாய் வாழ்ந்தநிலம் அபகரிப்பு
பாவியரால் கவர்ந்த பிள்ளை நினைவெரிப்பு
சிரம் நிமிர்ந்து வாழநிலை எட்டாக் கொம்பில்
சித்திரை கண்டெத்தனை பேர் மகிழ்வாரெம்மில்!
வரமாக வாய்க்கின்ற வாழ்க்கை ஒன்றை
வசமாக்கி வாழும்நாள் மலர்வ தென்று?
கரங்கோத்து ஒன்றிணைந்தால் விடிவு பூக்கும்
களிப்போடு சித்திரைநாள் நிறைவைத் தேக்கும்...!!!

-சிறுகதை-

-மு.பஷீர்-



# மீட்பு...!!!

வானொலியிலிருந்து நிகழ்ச்சிக்கான அழைப்பு வந்திருந்தது. இன்று உடம்பிற்குச் சரியில்லை. நோய்க்கான சமிக்ஞை தென்பட்டது. மேனிக்குள் அரக்கன் புகுந்து கொண்ட வலி, உளைச்சல், நீரிழிவு நோயின் உபாதை உடலெங்கும் பரவியிருந்தது. இன்றைய யுகத்தில் சர்க்கரை நோயை விலைக்கு வாங்கிக் கொண்டு சங்கடப்படுவோர் ஏராளம். கட்டுப்பாடான உணவு, நேரத்திற்கு மாத்திரை, தினமும் தேகாப்பியாசம் என்றிருந்தால் நோயின் உக்கிரம் தணிந்திருக்கும்.

அசட்டையாக இருந்து குருதியேற்றங்களை அலட்சியம் செய்வதால், மேனியில் சீனியேறி சங்கடங்களைத் தோற்றுவிக்கும். இது கடுமையான நோய்களோடு கூட்டரசாங்கம் அமைத்துக் கொண்டு மனிதன் மேலூர் போவதற்கு இலவச விசா தருகிறது.

ஒவ்வொரு வெள்ளி தோறும் இரவு எட்டு இருபதுக்கு எனது **"வாழும் கதைகள்"** நிகழ்ச்சி வானொலியில் நீண்ட காலங்களாக ஒலிபரப்பாகி வந்தது. இன்றைய ஒலிப்பதிவைத் திடீரெனத் தள்ளிப் போடவியலாத சங்கடம் எனக்கு. ஊரிலிருந்து சிரமப்பட்டு, பஸ் எடுத்து, கொழும்பு புறக்கோட்டையை வந்தடைகிறேன். தலைநகரில் தலைநகரின் பேய் வெப்பம் குருதியணுக்களைக் குடைகிறது. கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பு வந்து, நின்று, நூற்றிப் பதினைந்தாம் இலக்கப் பேருந்துக்காய், கால் கடுக்கக் காத்து

நிற்கிறேன். பேருந்துகள் இராட்சதப் பெருமூச்சுடன் விரைந்து வருகின்றன. பிரயாணிகளைப் பொதிகள் ஏற்றுவதைப் போன்று, அள்ளிப் போட்டுக் கொண்டு நெரிசலில் ஊர்கின்றன.

சனியன் பிடித்த நூற்றிப் பதினைந்தை இன்னும் காணவில்லை. இது எப்போதும் இப்படித்தான். எப்போதாவது அபூர்வமாக வரும். அல்லது வராமலேயே காலை வாரிவிடும். இந்தப் பேருந்தில் போவதில் ஒரு நன்மையுண்டு. நேராகச் சென்று ரூபவாஹினி தரிப்பிடத்தில் இறங்கி விடலாம். ஒரு பொடிநடை போட்டதும் வானொலி நிலையத்தை எட்டி விடலாம். வேறு மார்க்கமாக வருவதென்றால் சிரமம்தான்.

ஐம்பது நிமிட நீண்ட நேரக் காத்திருப்பின் பின் நூற்றிப் பதினைந்து சாவகாசமாக தூரத்தில் வருவது தெரிகிறது. வெறுப்புடன் கைக்கடிகாரத்தில் விழி புதைக்கிறேன். ஒலிப்பதிவு நேரத்திற்கு இன்னும் ஐந்து நிமிடங்களே எஞ்சியிருந்தன. இது இரதத்தினைப் போல், அசைந்தசைந்து மெல்லப் போய்ச் சேர அரை மணித்தியாலமாவது எடுக்கும். காலை ஆகாரம் எடுக்கத் தவறியதால், வயிற்றுக்குள் வன்முறை வேறு. உடலின் பதைபதைப்பு, வெயிலின் அனல் வெப்பம், வியர்வை கரப்பு இத்தியாதி நெருக்கடிகள்.

எப்படியோ வந்து சேர்ந்து கலையகத்தினுள் காலடி எடுத்து வைக்கிறேன். நிகழ்ச்சித் தயாரிப்பாளர், வழுக்கை தலையும் - மூக்குக் கண்ணாடியுமாக அதிருப்தியுடன் என்னை வெறித்தார். அப்படியொன்றும் குறித்த நேரத்தில் சடுதியாக அங்கு ஒலிப்பதிவுகள் நிகழ்வதில்லை. அறை ஒழுங்கு செய்தல், கலைஞர் வருகை தாமதம் எனப் பொழுது வெறுமனே கரைந்து விடும். என்றாலும், நிகழ்ச்சி வழங்குபவர், குறித்த நேரத்தில் வந்திருக்க வேண்டுமென்பதில் ஒரு தொன்மையான மரபு பேணப்படுகிறது.

நிகழ்ச்சி ஒலிப்பதிவு முடித்து வரவேற்பறையில் வவுச்சருக்கு காசு பெற்று வெளியே வர, பகல் இரண்டு மணியைத் தாண்டி விட்டது. மீண்டும் திரும்பிச் செல்லும் உந்துதலில் பேருந்துக்காகத் தவமியற்றும் காத்திருப்பு. புறக்கோட்டை சென்றடைந்தால், செட்டித்தெரு அன்னபூர்ணாவில் பசி போக்க அன்னமெடுக்கலாம் - என்ற கரிசினையில் விரைந்து வந்த பேருந்தொன்றில் ஏறித் தொற்றிக் கொள்கிறேன்.

பசிக்களைப்பில் கால்கள் நடுங்கின. உலகில் வாழும் காலம் வரை, இரண்டு விடயங்கள் முக்கியமானவை என்பது தற்போதைய என் கணிப்பு.

ஒன்று பணம். மற்றது உடலாரோக்கியத்துடன் கூடிய இளமை முறுக்கு. இவற்றை எங்கோ? எப்போதோ? தொலைத்து விட்ட ஜீவித இருப்பின் மீது, எனக்கிப்போதும் கசப்பு.

பேருந்தின் நெரிசலில் உப்பு மூடைகள் அசைந்தன. வியர்வை நெடி, நெருக்கித் தள்ளும் மனித அழுத்தம். இந்தக் கஷ்டத்திற்குள்ளும் ஒரு கற்பனை வேறு சுரக்கிறது. எழுத்தாளன் ஆயிற்றே. கற்பனைகளோடு உள்ள ஆத்மார்த்த சிநேகம் வேறு எதில் இருக்கிறது? ஜம்மென்று உட்கார்ந்து கொண்டு பிரயாணம் செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், எத்தனை உவப்பானதாக இருக்கும்? கற்பனைகள் தான் எவ்வளவு இனிமையானவை. காரிய சித்தி கைகூடுகிறதோ, இல்லையோ? நமது மனம் கற்பனை நெகிழ்ச்சிகளில் சுகம் காண்கிறதே. கற்பனை பண்ணிப் பார்க்கிற அடிப்படைச் சுதந்திரமாவது நமக்கு எஞ்சியிருக்கிறதே. அதனால் தப்பிப் பிழைத்தோம். இது என்ன ஆச்சரியம்? கற்பனை கூட, இத்தனை கெதியில் காரியசித்தி ஆகிவிடுமா?

ஒரு கனவான் இருக்கையிலிருந்து எழுந்து நிற்கும் பிரயத்தனம். அடுத்த தரிப்பிடம் வந்ததும், அவர் இறங்கி விடக்கூடும். தவளையைக் கௌவிய பாம்பாக அந்த இருக்கையை ஆக்கிரமித்ததன் பின்புதான், ஒழுங்காக மூச்சு வந்தது. ஜன்னலோர இருப்பு. இதமான காற்று. ஜில்லென்று முகத்தோடு உறவாடியது. பசிக்களைப்பு, சோர்வு - இவற்றின் கிளர்வினால் ஒரு குட்டித் தூக்கமே வந்துவிட்டது என்றால், அதை யாரால் தடுத்து நிறுத்திவிட இயலும்? இடத்திற்கிடம் அசைந்தசைந்து மெல்ல ஊர்ந்து, நடை பயில்கிறது பேருந்து. இடைக்கிடையில் கண்விழித்து புறக்கோட்டை அண்மித்து விட்டதா? என நோட்டமிட்டேன்.

மருதானை பழைய காமினித் தியேட்டரின் முன்னால் தேர் தரித்து நின்றது. மீண்டும் குட்டித் தூக்க ரசனையில் விழிகள் கிறங்கின. சிறிது நேரம் சென்றிருக்கும், திடுக்குற்றுத் தடுமாறி விழித்தேன். பேருந்துக்குள் என்னைத் தவிர வேறு எவருமில்லை. வெறிச்சோடிப் ,போயிருந்தது. பேருந்து நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஓட்டுனரும், கண்டக்டரும் எங்கு போய்த் தொலைந்தார்கள்.

தலை கிறுகிறுக்கத் தடுமாறி, பதை பதைத்து சற்றும் - முற்றும் பார்த்தேன். பீதியும், அச்சமும் அடிவயிற்றைக் கௌவியது. உள்ளேயிருந்த

பயணிகள் எல்லோரும் தங்கள் பைகளைச் சுமந்த வண்ணம் வரிசையில் தெருவில் நின்றார்கள். ஆமிக்காரர் மூவர், ஒவ்வொருவராகப் பயணிகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள். அவசரமாக எழுந்து போய் வரிசையில் ஒட்டி நிற்பது சங்கை, என்ற உணர்வோடு எழுந்து நிற்க முனைகையில், ஓர் இராணுவ வீரன் சிங்களத்தில் கடுமையாகத் திட்டியவாறு, என்னை நோக்கி வந்தான்.

கால்கள் இரண்டிலும் திமித்தலுடன் கூடிய பொல்லாத வலி. எல்லாம் கும்பகர்ண நித்திரையால் வந்த சாபக்கேடு. நான் மட்டும் பேருந்துக்குள் இவ்வளவு நேரம் மந்தியைப் போல் குந்தியிருந்திருக்கின்றேன். இனி என்ன சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டி வருமோ? குண்டுக் கலாசாரத்தினால் முழுநாட்டையே உலுப்பிக் கலைத்துக் கொண்டிருந்த காலப் பரப்பு அது. இராணுவச் சோதனைகளும், கெடுபிடிகளும் நிறைந்திருந்தன.

**“உனக்கு மட்டும் வேற சட்டமா? கீழே இறங்கி வரமாட்டாயா? நீ என்ன பெரிய ஆளா? கீழே இறங்கி வா ஓய்!”** என ஆமிக்காரன் உறுமினான்.

எனக்குத் தொண்டை வரண்டது. நாவு தடுமாறியது. **“என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு நோயாளி. அசதியில் தூக்கம் போயிட்டுது. என்னை நம்புங்கள். பிளீஸ்!”**– என்று நெகிழ்வாகச் சிங்களத்தில் விடை சொன்னேன்.

இவர்களிடம் மிருகத்தனமாக அடிவாங்கிச் சாகும் மிருகபலம் என்னிடம் சிறிதுமில்லை– என்பது மட்டும் தெரிந்த யதார்த்தம்.

பாதையில் நின்று சற்றும் – முற்றும் பார்த்தேன். எதிர்த் திசையில் லேக்ஹவுஸ் கட்டிடம் விறைத்து நின்றது. அடையாள அட்டையைத் துருவினேன். அதை முன்கூட்டியே கையில் எடுத்து வைத்துக் கொள்வது உசிதம் அல்லவா? திடீர் அதிர்வில் நிலை குலைந்து விட்டேன்!

அடையாள அட்டையைக் காணவில்லை.

பொக்கட்டிலும், பையிலும் துருவித் துருவித் தேடியாயிற்று. பலன் பூஜ்யம்.

எங்கு தான் தவறவிட்டேன். கலையகத்தில் வவுச்சருக்குக் காசெடுக்கும் போது கையில் இருந்ததே. எப்படித் தொலைந்து போயிருக்கும்? வரவேற்பு மண்டப மேசையில் மறதியாய் விட்டு விட்டேனா? தொலைந்த பொருள் நினைவு தீட்சண்யத்தில் சிக்க மறுக்கிறது. எனது கால்களிரண்டும் கிடுகிடா நடுங்கத் தொடங்கி விட்டன. இது என்ன சோதனை? அடையாள அட்டையின்றி

இவர்களிடம் மாட்டிக் கொண்டு, என்ன பாடுபடப் போகிறேன்?

பசித்த வயிற்றுக்கு சாப்பிட்டு விட்டு, அப்படியே போய் பூபாலசிங்கம் புத்தகசாலையில் சஞ்சிகைகள் சிலவற்றை வாங்கிக் கொண்டு, வீடு போய்ச் சேரலாம் – என்ற எண்ணமெல்லாம் மண்ணாய்ப் போய் விட்டதே! கொழும்புக்கு வரும் பொழுது, கணையாழி, காலச்சுவடு, **"தென்றல்"**, தாமரை, மல்லிகை என்று எனது இரசனைக்கேற்ற இலக்கிய இதழ்களை வாங்குவது வழக்கம்.

இவற்றைப் படிக்கத் தவறியால், நெஞ்சுக்குள் ஏதோவொரு இழப்பு, நெருடல், வயிற்றுப்பசி மட்டும் தீர்ந்தால் போதுமா? அறிவுப் பசியை, இலக்கியத் தாகத்தைத் தீர்க்க வேண்டுமே. இந்தச் சிக்கலில் இருந்து எப்போது விடுபடுவேன்?

என்னை முறைத்துப் பார்த்து விட்டு, **"அடையாள அட்டை எங்கே?"** – என்று ஓர் ஆமிக்காரன் கேட்டான்.

**"காலையில் வரும் போது கொண்டு வந்தேன். இடையில் எங்கோ தவறிவிட்டது"** – என்று பதிலிறுத்தேன்.

பரிதாபம் இழைந்த குரலில், சிகப்பாய் புஜத்தில் மூன்று நட்சத்திரங்கள். மினுங்கும் சீருடை உத்தியோகத்தர், ஓர் எள்ளல் தோரணையில் என்னைச் சீற்றத்தோடு முறைத்தார். **"உன்னைக் கேம்புக்கு கொண்டு போய் விசாரிக்கிற முறையில விசாரிச்சா, உண்மை வெளிவரும்"**– எனக் கூறினான். அவனது பயங்கரத் தோற்றம் பீதி கொள்ளும்படியாக இருந்தது.

நான் மிகவும் நளினமாக எனது நிலையினை எடுத்துக் கூறினேன். **"நான் கிரிமினல் அல்ல; சமூகத்தால் மதிக்கப்படுகின்ற ஒரு பிரஜை"**. எனது விசிட்டிங் காட்டினை அவர் கையில் கொடுத்தேன்.

அதில் கலாபூஷணம், சமாதான நீதவான், கவிஞர், எழுத்தாளர், என்றெல்லாம் பொறிக்கப்பட்டிருந்தும் என்ன பயன்? சந்தேகம் தீர்ந்த பாடில்லை. அவர் நெஞ்சிலிருந்து ஈரம் சிறிதும் பிறக்கவில்லை. **"இல்லை? உன்னைக் கேம்புக்குக் கொண்டு போகப் போறோம்!"**

நான் நெஞ்சுடைந்து பத்திரிகையாலய ஏறுபடிகளை விரத்தியாய் வெறித்தேன். திடீரென ஞாபகத்திற்கு வந்த ஒரு விடயத்தை அவர்களிடம் கூறினேன். **"அதோ தெரியும் பத்திரிகையாலயத்தில் தமிழ்த் தினசரியொன்றில் பிரதியாசிரியராகப் பணிபுரிபவர் எனது நண்பர். நீங்கள் அவரிடம் என்னைப் பற்றி விசாரித்து அறிந்து விட்டு, என்னை எங்கு வேண்டுமானாலும்**

கொண்டு போங்கள்"- என்றேன்.

வேதாளம் முருங்கை மரத்திலிருந்து சற்று கீழிறங்குவதாக எனக்குத் தெரிந்தது. நானும் ஆமிக்காரர் ஒருவரும் பிரதியாசிரியர் சூரியனின் வருகைக்காக கீழே வரவேற்பு மண்டப வாயிலில் காத்திருந்தோம்.

சூரியனை அரபு மொழியில் எப்படி அழைப்பார்களோ அதுதான் அவரது நாமம். அவர் மிகப் பிரசித்தமான பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளர். சமாதானம் மலர, வெள்ளிச் சிறகசைக்கும் வெண்புறாவை நெக்குருகும் பாடலினால் அழைத்து, எல்லோரினது நெஞ்சங்களையும் அகர்சித்துக் கொண்டவர். உதட்டில் நெளியும் புன்முறுவலோடு, கண்ணாடி அணிந்த மெல்லிய சரீரவாகு கொண்ட சூரியன் மாடிப்படிகளிலிருந்து கீழிறங்கிக் கொண்டிருந்தார். ஓடிச் சென்று அவரது கைகளைப் பற்றிக் கொண்டு எனது நிலையினை விளக்கினேன். கீழிறங்கி, பாதைக்கு வந்து அந்த மூன்று நட்சத்திர உத்தியோகத்தரோடு சிறிது நேரம் சிங்களத்தில் வாதம் புரிந்தார்.

பத்திரிகையாளனோடு எதற்கு வீண்வம்பு. என்ன ஞானோதயமோ தெரியவில்லை. மூன்று நட்சத்திரம் என்னைப் போக அனுமதித்தது. போன உயிர் திரும்பி வந்ததில் மகிழ்ந்து, நண்பன் சூரியனை ஆரத் தழுவினேன். அவர் எனக்கு ஆறுதல் கூறினார்.

**"எச்சந்தர்ப்பத்திலும் மனம் தளரக் கூடாது. மனதில் உறுதி வேண்டும்.. என்ற பாடல் வரிகளை மறந்து போனீரா?"** - என்று என் தோளில் கையழுத்திக் கேட்டார். இலக்கிய வானில் தன்னிகரற்று சுடர்ந்த சூரியனின் திடீர் இழப்பு, இன்றும் மனதில் துயரங்களைச் சொரிகிறது....!!!

எழுத்தாளர்களே! தங்களால் வெளியிடப்படும் நூல்கள், இறுவட்டுக்கள் புதிய வரவுகளில் இடம்பெற வேண்டுமானால், உங்களால் வெளியிடப்பட்ட நூல்கள், இறுவட்டுக்களைத் **"தென்றலுக்கு"** அனுப்பி வையுங்கள்.

(ஆ-ர்)




உழைத்துடலை வருத்தியிங்கு
உலரும் வாழ்வில் துன்பமுடன்
பிழைக்கத் தொழிலைத் தொடர்கின்றார்
பிறரின் தயவைப் பாராது
இழைத்தும் வருவாய் போதாமல்
இதயம் வாடும் தொழிலாளி
தழைக்கும் வழிகள் கிடைத்தாலே
தரணியிலவர்க்கு மேதினமாம்..!

வறுமையென்ற மேலாடையை
வாகாய்ப் போர்த்தி குடும்பத்தில்
சிறுமை நீக்கப் பலதொல்லை
சிந்தை சுமந்து தடைபலதில்
பொறுமை பூண்டு வலித்துடலை
பொருளைச் சேர்க்க வுழைத்தாலும்
நிறுத்தே கிடைக்கும் ஊதியத்தால்
நிம்மதியில்லா மேதினமே..!

உள்ளோரென்றும் உயர்கின்றார்
உறுத்துமேழை யுயர்வதற்காய்
நல்லோருதவித் திட்டங்களை
நாட்டில் நிறுத்தி சமூகத்தில்
அல்லல் நீங்கித் தொழிலாளர்
அவனியிலே ழ்மைக் குடும்பங்களும்
இல்லாமை நீக்கவுதவிட்டால்
இதுவேயவர்க்கு மேதினமாம்..!

என்றும் தொழிலாளர் உயர்வுபெற
எழும் நிகழ்காலம் வரவேண்டும்
நன்று தொழிலில் நீதி, நேர்மை
நிறைந்துழைக்கும் உழைப்பாளர்
வென்றுரிமை நாட்டினிலே
விடிவையவர்கள் பெற்றாலே
என்றும் வருமிம் மேதினத்தால்
எழிலோர் சமூகம் உருவாகும்..!!!

# இது என்ன உலகங்கா!!!

நேரடி ரிப்போர்ட்

– தர்மா –

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரத்திலுள்ள புதிய டச்பார் வீதியின் சில இடங்களில் கொங்கிரீட் கலவையிட்டு, அழுத்தப்படாமல் காப்பற் போடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மழை பெய்யும் காலங்களில், நீர் தேங்கி, வெள்ளக் காடாய்க் காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இவ்வீதியால் பயணத்தை மேற்கொள்ளும் – பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், நோயாளர்கள், பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் சொல்லொண்ணாத துன்பத்துக்கு ஆளாவதாக **"இது என்ன உலகங்காவுக்கு.!!!"** தெரிவிக்கின்றனர்.

வாகனப் போக்குவரத்து அதிகமாகக் காணப்படும் இவ்வீதியில் நீர் தேங்கி நிற்கும் காலங்களில் விபத்துக்களும் ஏற்பட ஏதுவாகவுள்ளது. அத்தோடு டெங்கு நுளம்புகள் பெருகி, டெங்குக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கவலையோடு கண்ணீர் மல்க **"இது என்ன உலகங்கா."** விடம் பதிவு செய்கின்றனர்.

இவ்வீதியின் சீர்கேட்டுக்கு வெள்ளநீர் வடிந்தோடுவதற்கான உரிய வடிகாலமைப்பு இல்லாமையே காரணமாகும் – எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் உரிய தரப்பினர் உடனடிக் கவனம் செலுத்தி, மக்கள் துயர் தீர்க்க ஆவன புரியுமாறு **"இது என்ன உலகங்கா."** வேண்டுகோள் விடுக்கிறது.

இதற்கான நடவடிக்கை உடன் எடுக்கப்படுமா? காலம் பதில் சொல்லும்......!!!

கவிதை-

-ஏரூர் எச்.எம்.எம்.றசீம்-

# தாய்மை!

கருவுற்ற நாள் முதலாய்ப்
பெற்றுப் பெரிதாகும் வரை
அன்னை பட்ட பாடுகளை
ஆண்டவன் மட்டுமே
அனுவனுவாய் அறிவான்!

பத்து மாதங்கள்
வயிற்றுனுள்ளிருந்து
படுத்தியபாடுகள்
சாவிற்கும் வாழ்விற்குமிடையே
சமர் புரிந்து
பிள்ளையாய்ப் பிரசவிக்கப்
பட்ட பெரும் வேதனைகள்!

இரத்தத்தைப் பாலாக்கி
இரணமாய் எமக்கூட்டி
நுளம்பு மொய்க்காமல்
இரவு பகல் காத்து
நோய் பிணி வந்தால்
நொந்து சலிப்புற்று
தாய் பட்ட பாட்டின்
தரத்தினை யாரறிவர்!

பிரசவ நோக்காட்டைப்
பெற்றவளே யறிவாள்
சாக்காட்டின் வேதனையைச்
செத்தவன்தான் அறிவான்
நீயறிய வேண்டுமாயின்
ஒரு முறை நீயும்–செத்துப்பார்!

பாடின்றிப் பட்டமில்லை
பட்ட பாட்டிற்கு
அவளுக்கொரு பதவி
அது **"தாய்மை"** எனும்
தன்னிகரற்ற பெரும் பதவி!!!



# படமும் பதிவும்

திருமதி. கவிதா கிருபாகரன்





மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தினால் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் க.பரராஜசிங்கம் எழுதிய **"சிந்துவெளி நாகரீகமும் தமிழரும்"** என்ற நூல் 30.01.2018 அன்று தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி எம்.கணேசராஜா தலைமையில் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிரேஷ்ட ஆய்வாளரும், **"தென்றல்"** சஞ்சிகை எழுத்தாளருமான கவிக்கோ வெல்லவூர்க் கோபால் நூல் வெளியீட்டுரை ஆற்றுவதையும், நூலாசிரியர் க.பரராஜசிங்கம் நூலின் முதற் பிரதியைத் தேசபந்து எம்.செல்வராஜாவுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.





மட்டக்களப்பிலிருந்து வாராந்தப் பத்திரிகையாக வெளிவரும் "அரங்கம்" பத்திரிகையின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு காந்தி பூங்காவில் 23.02.2018 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பி.பி.சி. செய்திச் சேவை ஊடகவியலாளர் பூபாலரட்ணம் சீவகன் உரையாற்றுவதையும், கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வி.தவராஜா மற்றும் பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோருக்கு பத்திரிகையின் முதற் பிரதியை வழங்கி வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.








இலங்கைச் சுற்றுலா கற்கைகள் நிறுவகத்தின் கீழ் விருந்தோம்பல் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கற்கைகள் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புத்திக்க கேவவாம் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 02.03.2018 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட க.வி. விக்னேஸ்வரன் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த இளைஞர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதையும், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.











தென்றல்













உங்கள் "தென்றல் சஞ்சிகை" நடாத்திய "கலாபூஷணம், கலைச் செம்மல்" முருகேசி தம்பிப்பிள்ளை எழுதிய "வாழப்பிறந்தவள்" (சிறுகதைகள்), "புதுமைப்பெண், சுதந்திரப் பறவைகள்" (நாவல்கள்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா "தென்றல் சஞ்சிகை" ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையில் களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் 10.03.2018 அன்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் "தென்றல் சஞ்சிகை" ஆசிரியர் க.கிருபாகரன் அமுதவிழா நாயகனும், நூலாசிரியருமான முருகேசி தம்பிப்பிள்ளைக்குப் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்துப், பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதையும், "தென்றல் சஞ்சிகை" ஆசிரியர்பீட உறுப்பினர் க.கோபாலபிள்ளை வரவேற்புரையையும், "தென்றல் சஞ்சிகை" எழுத்தாளர் பவளேந்திரன் அனுஜா நன்றியுரையையும், குருமண்வெளி மகாவிஷ்ணு, நாகதம்பிரான் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வ.யோகராஜா குருக்கள் ஆசியுரையையும் ஆற்றுவதையும், நூலின் பிரதிகளை பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.ஜெயந்திமாலா, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கப் பொருளாளர் புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி, பன்னூலாசிரிர் ஜனாப் எம்.எம். மஷ்றூப் கரீம், மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் நி.டிமாலினி, செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன், மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.சிவநாதன் ஆகியோர் பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம் + தகவல்:- வ.சக்திவேல்)





## அனைவரையும் ஈர்த்த மகாஜனா கல்லூரி மெய்வல்லுனர் போட்டி!



மட்/மட்/மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 30.01.2018 அன்று கல்லூரி அதிபர் கே.அருமைராஜா தலைமையில் மட்/மட்/இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம். உதயகுமார், மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஹைதரலி, மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.அருட்பிரகாசம், ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.சுகுமார், சட்டத்தரணி சுலோஜன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இதில் வினோத உடைப்போட்டி, பழைய மாணவிகளுக்கான போட்டி, பெற்றோர்- ஆசிரியர்களுக்கான போட்டிகள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.







**நூல்** :- "வாழப்பிறந்தவள்" (சிறுகதைகள்)

**ஆசிரியர்** :- "கலாபூஷணம்" மு.தம்பிப்பிள்ளை

**வெளியீடு** :- "தென்றல் சஞ்சிகை"

**விலை** :- ரூபாய் 450.00

இச் சிறுகதைத் தொகுப்பானது இக்காலகட்டத்தில் மனித வாழ்வில் நடைபெறுகின்ற பல்வேறு அலவங்களை புடம் போட்டுக் காட்டுவனவாக உள்ளது கண்கூடு. மேலும் இக்கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு வித்தியாசமாகவுள்ளது.

---

**நூல்** :- "புதுமைப்பெண்". "சுதந்திரப் பறவைகள்" (நாவல்கள்)

**ஆசிரியர்** :- "கலைச்செம்மல்" மு.தம்பிப்பிள்ளை

**வெளியீடு** :- "தென்றல் சஞ்சிகை"

**விலை** :- ரூபாய் 400.00




சமூகத்தைச் சீர்திருத்தும் வகையில் இரு நாவல்களும் புனையப்பட்டுள்ள விதம் பாராட்டுக்குரியது. அத்தோடு ஆசிரியர் நீதியான சமூகத்தைக் காண விழையும் சிறந்த தன்மையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. ஆசிரியர் தனது நோக்கில் சிறப்பாக வெற்றி பெற்றுள்ளார் என்பது வெள்ளிடை. இவ்விரு நூல்களும் **"தென்றல் சஞ்சிகையால்"** வெளியிடப்பட்டன. அத்தோடு அமுதவிழா நாயகனின் எழுத்தாக்கல் பணிகள் தொடரத் **"தென்றல் சஞ்சிகை"** இறைவனை வேண்டிக் கொள்கிறது.

-பேராசிரியர் செ.யோகராசா-

# ஒப்பு நோக்கில் மலையகக் கவிதை

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு மலையக நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சி நிலை பற்றி அவதானிப்பது - அவ்விதத்தில் மலையக நவீன தமிழ்க் கவிதையின் தனித்துவங்கள் பற்றிக் கவனிப்பது - முக்கியமான தொன்றாகவுள்ளது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் நவீன தமிழ்க் கவிதை மீனாட்சியம்மன் நடேசஐயர், கோ.நடேசய்யர் ஆகியோரின் முயற்சிகளினால் 1930களில் முகிழ்ந்தாலுங்கூட ஏறத்தாழ 1960 வரை அம்முயற்சி பரவலாகவோ, ஆழமாகவோ வேரூன்றியதாகக் கூற முடியாது. அவ்விருவரையும் தொடர்ந்து வாய்மொழிக் கவிஞர் குழாத்திடம் மலையகக் கவிதை சென்று விடுகிறது. மக்கள் கவிமணி சி.வி.யை ஆங்கிலத்தில் எழுதிய கவிஞராகவே கருத வேண்டும். 1940களின் பின் கூறிலே இடம்பெற்ற கே.கணேஷின் நவீன கவிதை முயற்சிகள் தொடரவில்லை- என்பதோடு, காலம் அவரை மொழி பெயர்ப்புக் கவிஞராகவே உருவாக்கி விட்டது. 1950 களில் உருவானவர்கள் மலையகம் பற்றிப் பாடினாரென்பதை விட, அக்காலப் பகுதியிலே பிரதான போக்காக இருந்த (மொழி வழித்) தேசிய உணர்வு சார்ந்த கவிதைகளையே படைத்தனர்- என்பதே பொருத்தம். சக்தி அ.பாலையாவின் படைப்புக்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகின்றன. (ஆதாரம் :- சொந்த நாட்டிலே தேசிய கீதங்கள்- சுதந்திரன் அச்சகம்'-1960, 1961) களிலேயே இத்தகைய போக்கில் மாற்றமேற்படுகிறது. தமிழோவியன், குறிஞ்சிநாடன் முதலானோரின் பிரவேசம் நிகழ்கிறது. மலையகம் பரந்த தளத்திலே அவர்களது கவிப்பொருளாகிறது. 1960 தொடக்கம் இன்று வரையான மலையக நவீன கவிதை வளர்ச்சியின் தனித்துவங்கள் யாவை? என்பதே எமது கேள்வி.

மேற்கூறிய விதத்தில் நோக்கும் போது முதலில் குறிப்பிடத்தக்க தனித்துவப் பண்புகளாக விளங்குவது, மலையகக் கவிஞர்களின் சமூக உணர்வாகும். அதாவது, ஏனைய பிரதேசக் கவிஞர்களுடன் ஒப்பிடும் போது, இப்பண்பு இங்கு முதன்மைப்பட்டிருக்கிறது என்பது ஒன்று. மறுதலையாக இயற்கையையும், காதலையும், கவிதையையும், தெய்வத்தையும் பெருமளவு பாடவில்லை என்பது மற்றொன்று. ம.சண்முகநாதனின் கவிதைகள் பற்றி

**"ஓங்கி வளர்ந்த உச்சி மேட்டினின்று தொலைநோக்கி, அழகு காட்டும் கதிர்காமக் குன்றையும், சிங்கராஜப் பெருங் காட்டின் சிங்காரத்தையும், சமனளவாவியின் வளத்தையும் வருணனை செய்ய முன்வரவில்லை"** - என்று கே.கணேஷ் குறிப்பிடுவது (கவனத்திற்குரிய) மலையகக் கவிஞர்கள் அனைவருக்கும் பொருந்துகிறது என்பதில் ஐயமில்லை.

மேற்கூறிய சமூக உணர்வு என்பது நாம் நன்கு அறிந்தது போன்று, **"கதிரவனுக்கு முன்னெழுந்து, உணவு சமைத்து, பெரட்டுக் களம் சென்று, குளிரைச் சகித்து, மலையேறிக் கொழுந்து பறித்தும், கவ்வாத்து வெட்டியும், கான் போட்டும், முள் குத்தியும் மாலை வீடு வந்து துயிலும்"** - மலையகத் தொழிலாளர்களின் பல்வேறு வகையான அவலங்களை அதிகளவு சித்தரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு நான் கூற வருவது, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் உள்ள தொழிலாளர்களது வாழ்க்கையை அவ்வவ் பிரதேசக் கவிஞர்கள் கண்டும் காணாதிருக்கும் போது, மலையகக் கவிஞர்கள் அவ்வாறு வாளாவிருக்கவில்லை என்பதே. ஆக, மலையகக் கவிதைகளின் மற்றொரு தனித்துவம் தொழிலாளர்கள் பற்றி அதிகம் பாடப்படுவதாகும்.

மேற்கூறிய பண்பினை நுணுகி நோக்கும் போது, அதனூடே இன்னொரு தனித்துவம் மேற்கிளம்புகிறது. அதாவது, தொழிலாளர்கள் தமது அவலங்களைத் தாமே வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்விதத்தில் பலர் இருப்பினும் குறிஞ்சித் தென்னவனும், மல்லிகை சி.குமாரும் உடன் நினைவிற்கு வருகின்றனர். **"துன்பம் தொலையவில்லை, துயரக் கதையோ முடியவில்லை"**- என்று தொழிலாளியான குறிஞ்சித் தென்னவன் பாடுவதற்கும், தொழிலாளர் வர்க்கம் சாராத பிற கவிஞர் பாடுவதற்கும் இடையிலான உணர்வுத் தனம் வேறு என்பதனை அழுத்தி உணர்த்த வேண்டியது அவசியமன்று.

இனி மலையகக் கவிதைகளின் வடிவம் பற்றியும், சிலவற்றைக் கூறவேண்டியுள்ளது. எமது இலங்கைக் கலைஞர்கள் எமது மரபிலிருந்து உறிஞ்ச வேண்டியவை உள்ளன. நாட்டார் பாடல் வடிவங்களைப் பயன்படுத்துவ தென்பது இவற்றுள் ஒன்று. இவ்விதத்தில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது, மலையகக் கவிதைகளில் இப்பயன்பாடு அதிகமுள்ளமை கவனத்திற்குரியதாகின்றது.

**"மட்டம் சரியாப் போடு மாரியாயி - தேயிலை**
**மாரெடுத்துக் கீழே போடு மருதாயி**

சட்டப்படி வேலை செய்யும் மூக்காயி - மலைக்குச்
சங்கூதுது முன்னம் வாடி மூக்காயி"

- என்று அறுபதுகளின் கவிஞர்கள் மட்டுமன்றி,

"என்ன மச்சான் சிவராசா
சில்லறையா எண்ணுறியே
கோடியா நீ ஒழைச்சும்
கோவணமும் மிஞ்சலையா?
ஒழைச்சுக் கொடுத்த நாங்க
பிச்சை எடுத்த காலம்
மலையேறிப் போகுமடி
மச்சானோட வாருமடி"

- என்று எண்பதுகளின் கவிஞர்களும் பாடுவது குறிப்பிடத்தக்கது. (அதேவேளையில் இவ்விருகால கட்டக் கவிஞர்களின் பார்வை வேறுபாடுகளும் மேற்கூறிய பகுதிகளிலிருந்து புலப்படுவதை அவதானிக்குக.) மலையகத்தில் குறும்பா வடிவமும் சமூக உணர்வு மீது பயன்படுத்தப்பட்டுள்ளது -என்று கூறத் தோன்றுகிறது. (எ-டு) குறிஞ்சித் தென்னவன்,

"குப்பன் வாழ் லயத்தினது கூரை
குளமாக்கும் வீட்டை மழைத்தாரை
தப்பாது இங்கு வந்த
தகரமெல்லாம் ஓரிரவில்
அப்போதே அடையும் பெரும்பூரை"

- ஆயினும் குறிஞ்சித் தென்னவன் எழுதியதாகக் கூறப்படும் குறும்பா அனைத்தும் தொகுக்கப்பட்ட பின்பே இதனை உறுதி செய்ய முடியும்.

இலங்கையின் ஏனைய பிரதேசக் கவிதைகளில், எண்பதுகள் புதிய பாய்ச்சல்களை ஏற்படுத்தியது போன்ற நிலைமை மலையகத்திலும் நிகழ்கிறது. முன்னையோரைவிட தேடலும், வாசிப்பும், வேகமும் கொண்ட இளந்தலைமுறை ஒன்றின் வரவு இங்கு நிகழ்கிறது. முரளிதரன் பின்வருமாறு இதற்கு எடுத்துக் காட்டுகிறார்:-

"டன் டன் டனக்
டன் டன் டனக்
பழனியப்பா - நீ

பூமியினின்று கவ்வாத்து
செய்யப்பட்டு விட்டாயோ?
டன் டன் டனக்
டன் டன் டனக்"

– என்ற புதிய ஒலிகள், மலையகமெங்கும் எதிரொலித்து, இளந்தலைமுறையின் மத்தியில் எழுச்சி அலைகளை ஏற்படுத்துகிறது. இவ்விதத்தில் உள்ளடக்கம் மட்டுமன்றி, புதுவடிவப் பயன்பாடு முதன்முதலாக – கலாபூர்வமாக– பிரக்ஞை பூர்வமாக இவரூடாக வெளிப்பட்டதென்பதும் நினைவுபடுத்த வேண்டியதாகிறது. கூடவே, ஹைக்கூ வடிவத்தின் வரவும் இவரது கூடைக்குள் தேசத்திலிருந்து அறிமுகமாகிறது.

எண்பதுகளிலேற்பட்ட இன்னொரு பரிணாமம் மார்க்சிய நோக்கிலான முற்போக்குக் கவிஞர்களின் எழுச்சியாகும். இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இக்குழாத்தினர் தளர்ச்சி காண்கின்ற போது மலையகத்தில் அதற்கு மாறான நிலை காணப்படுகிறது. இவ்விதத்தில் இ.தம்பையா, சிவ. ராஜேந்திரன், எஸ்.பன்னீர்ச்செல்வம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆகின்றனர். இத்தகையோருள், எஸ்.பன்னீர்ச்செல்வத்தின் கவிதைகள் அழகியல் பெறுமானம் மிக்கவை.

நின்று நிதானித்து நோக்கும் போது, அறுபதுகளின் கவிஞர்கள் மலையகச் சமூகத்தைப் பாடியதற்கும், எண்பதுகளின் கவிஞர்கள் பாடுவதற்குமிடையில் முக்கிய வேறுபாடொன்றுள்ளது. அதாவது, எண்பதுகளில் பிரவேசித்த கவிஞர்களிடம் சமூகம், அரசியல் பற்றிய கூர்மையான விமர்சனம் காணப்படு கின்றமை அழுத்தி உரைக்கப்பட வேண்டியதே.

அதேவேளையில், இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலே குறிப்பாக வன்னி, அம்பாறை பிரதேசம் சார்ந்த இளந்தலைமுறைக் கலைஞர்கள் இலங்கையின் நவீன கவிதை வளர்ச்சியை வளம்படுத்தி வருவது கண்கூடு. மலையக இளந்தலைமுறைக் கலைஞர்கள் இவ்விதத்தில் பின்தங்கியுள்ளமையை மதுரத் தமிழ் (2000), தேட்டம் (2000), விருட்சப் பதியங்கள் (2000) ஆகிய தொகுப்புக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. மூத்த தலைமுறைக் கலைஞர்களும், விமர்சகர்களும் இது பற்றிச் சிந்திப்பது காலத்தின் தேவையாகின்றது. எனினும், மொழி பெயர்ப்புக் கவிதைத் துறையில், மலையகத்தின் பங்களிப்பு கணிசமானதென்பது நாமறிந்ததே. (எ-டு: கே.கணேஷ்)

இறுதியாக, ஒன்று கூற வேண்டும். இலங்கையின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவரான மீனாட்சியம்மாள் நடேசய்யர் இலங்கையின் அனைத்துக் கவிஞர்களுக்கும் சொல்லாமல் சொல்லியுள்ள இரு செய்திகள் எமது கவனத்திற்கு உரியனவாகின்றன. அவை :-

1. கவிதை அடிநிலை மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். அதாவது, கவிதையின் செயற்பாட்டுத் தளம் கவனத்திற்குரியது.
2. கவிதையின் உள்ளடக்க உருவப் பிணைப்பு மனதில் கொள்ளப்படல் வேண்டும் - என்பனவாகும்.

## வாசகர் நெஞ்சம்

மட்டு. நகரிலிருந்து பல்வேறு இடர்களுக்கு மத்தியில், தான் தோன்றிய நோக்கங்களின் அடிப்படையில் மக்களின் கலை, கலாசார, விழுமியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் "தென்றல்" சஞ்சிகை 06.04.2018 அன்று பத்தாவது அகவையில் காலடி எடுத்து வைப்பது என்பது வரலாற்றுச் சாதனையே. இதற்காகத் "தென்றல்" சஞ்சிகையை மனதார வாழ்த்துகிறேன்.

பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் நீ துவண்டு விடாமல், உனது காலை அகலப் பதித்து, வீறு கொண்டு எழுந்து, சேவையாற்றுவதை என்னவென்று பாராட்டுவது.

இங்கு பல்வேறு சஞ்சிகைகள் ஒன்று, இரண்டு, பத்து... என வந்த இடம் தெரியாமல் மறைந்து விட நீ பத்தாவது ஆண்டில் 37ஆவது இதழைப் பிரசவிப்பது கண்டு மனம் பூரிப்படைகிறது.

உனது பணி இன்னும் பல ஆண்டுகள் தொடரட்டும்...

என்றும் உன் வாசகி
ம.கீர்த்தனா,
மண்டூர்.

## -கவிதை-

-மருதமுனை எம்.எச்.ஏ.கரீம்-

# இலவசம்...!!!

சவூதியிலிருந்து
என் சம்சாரம் வந்தாள்
பார்க்கக் கவர்ச்சியான
பொம்மையொன்றும்
கொண்டு வந்தாள்
கம்பியூற்றர் குழந்தையென்று
குதூகலப்பட்டுக் கொண்டேன்
ஆனால்.....!
என் மனைவி
மார்பையெடுத்து
மகிழ்ச்சியுடன்
பாலூட்ட
"உயிருள்ளதா?"
என்று கேட்டேன்
ஆமென்று பதிலளித்தாள்
ஏதென்று நான் கேட்டேன்
இலவசமாய்க்
கிடைத்ததென்றாள்......!!!



இலக்கிய நயம்

# இராமபிரான் வைகுண்டம் சேர்தல்!

-கலாபூஷணம் முருகேசி தம்பிப்பிள்ளை-



இராமர் தன் அன்பு மனைவி சீதாப்பிராட்டியாரை இழந்ததால் அவர் வாழ்க்கை சூனியமாக இருந்தது. இராமர் தன் மனைவி சீதையின் எழில் உருவத்தை பொன்னால் சிலை வடித்து. தெய்வீக கருமங்களையும். அயோத்தியின் அரச கருமங்களையும் செய்து வந்தார். அதனால் காலந் தவறாது. மழை பொழிந்து. விளைச்சல் பெருகி. நாடு செழித்தது.

பல ஆண்டுகள் கடந்த பின் அன்னை கோசலை இயற்கையடைந்தார். அதன் பின்பு. சுமத்திரையாகிய சிற்றன்னையும் மறைந்தார். அதனைத் தொடர்ந்து மற்றொரு சிற்றன்னையாகிய கைகேயியும் இறந்தார். இவர்கள் தெய்வீக ஆட்சியில் கணவர் தசரத மன்னருடன் சேர்ந்தனர்.

இராமர் - பரதனுடன் இரண்டு மைந்தர்களான தக்ஷன். புஷ்கலன் ஆகியோரை கந்தர்வ இராட்சியத்தில் அரசனாக்கி வைத்தார். பின்னர் பரதன் பெரும் சைன்யத்துடன் சென்று. தக்ஷனைத் தக்ஷனா என்னும்

இடத்திற்கும், புஷ்கலனைப் புஷ்கலாவதியிற்கும் அரசர்களாக நியமித்தான். பரதன் ஐந்து ஆண்டுகளின் பின்னர் அயோத்திக்கு மீண்டு வந்தான்.

பின்னர் இலக்குமணனின் இரு புத்திரர்களான அங்கதன் மற்றும் சந்த்ரகேதுவையும் "காருப்பதம்" என்னும் இடத்திற்கு அரசனாக்கினான். தன் மைந்தர்களுடன் சென்ற இலக்குமணன் ஒரு வருடத்தின் பின்னர் அயோத்திக்கு வந்தான். இக்காலம் இராமருடைய அவதாரகாலம் பூமியில் முடிவடையும் நிலையை நெருங்கியது. காலதேவன் ஒரு நாள் அலைந்து திரிந்து சன்னியாசி போல் ரூபம் தாங்கி அயோத்தியை அடைந்தான். அரண்மனை வாயிலில் நிற்கும் இலக்குமணனைப் பார்த்து காலன், **"நான் பிரமாவினால் அனுப்பப்பட்ட தூதுவன், ஒரு விடயமாக இராமரைச் சந்திக்க விரும்புகிறேன்"** என்றான்.

இராமர் வந்தவனை ஒரு சிங்காசனத்தில் அமர வைத்து, உமது வருகை எவ்வாறானது எனக் கேட்டார். அதற்குத் தூதுவன் **"அரசே, நீர் பிரமாவை மதித்து இந்தச் சந்திப்பை இரகசியமாக காப்பாற்றுங்கள். நாம் பேசும் வார்த்தைகளை மற்றவர்கள் காதில் விழாது, பார்த்துக் கொள்ளுங்கள்"** – என்றான்.

இவ்வண்ணம் பிரமாவின் தூதுவனும், இராமரும் உரையாடும் போது, துர்வாங்க முனிவர் அரண்மனைக்கு வந்தார். இலக்குமணன் முனிவரை வரவேற்றான். அப்போது முனிவர், **"நான் முக்கிய விடயமாக இராமரைப் சந்தித்து, விரைவாகச் செல்ல வேண்டும்"** – என அவசரப்பட்டார். அதற்கு இலக்குமணன், **"இராமர் யாரையும் இப்போதைக்கு உள்ளே அனுமதிக்கக் கூடாது – எனக் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறார். ஆகையால் உடனே தங்களின் வருகையைத் தெரியப்படுத்த முடியாது"** – என்றான்.

இவ்வுரை கேட்ட துருவாசர் கோபங் கொண்டு, இலக்குமணனைப் பார்த்து, ஆர்ப்பரித்து, **"போ! போய் என் வரவை உடனே இராமருக்குக் கூறு! நீ என் சொல்லைக் கேட்காத முட்டாளாகவிருந்தால், நான் உன்னையும், இராமரையும், பரதனையும், முழுக் கோசல நாட்டையும் சபிப்பேன்"** – என்றார். அதைக் கேட்ட இலக்குமணன் இராமரின் அறையை அடைந்தான். துர்வாசகரின் வருகையை அறிவித்தான். இராமர் காலனிடம் விடை பெற்றுக் கொண்டு துர்வாச முனிவரைச் சந்திக்கச் சென்றார்.

இராமர் கைகூப்பி, "உமக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" - என்றார். அதற்கு அவர் "மன்னனே நான் ஓராயிரம் ஆண்டுகள் உண்ணாவிரதம் இருந்து, தற்போது அதனை நிறைவு செய்து விட்டு, வந்திருக்கிறேன். நீ எனக்கு உண்பதற்கு என்ன கொடுக்கப் போகிறாய்" - என்றார்.

அது கேட்ட இராமர் துருவாச முனிவருக்கு உடனடியாக பல்வேறு உணவுப் பண்டங்களை விருந்தாக அளித்தார். விருந்துண்ட முனிவர் மிகவும் மகிழ்ச்சியுடன், விடை பெற்றுச் சென்றார்.

இராமர் தான் காலனுக்குக் கொடுத்த வாக்குறுதியை எண்ணியதால் பயம் அவரை ஆட்கொண்டது. தனக்குச் சகோதரனுக்குச் சகோதரனாக- தோழனுக்குத் தோழனாக இருக்கின்ற இலக்குமணனை இழக்கப் போகின்றேனே என்ற எண்ணம் இராமரைத் தலை குனிய வைத்தது.

இந்நிலையில் இராமர் தன் மந்திரிகளை அழைத்து, நடந்தவற்றைக் கூறி, அவர்களது ஆலோசனைகளைக் கேட்டார். அப்போது வசிட்டர், "இராமா! என் ஞான திருஷ்டியால் உனக்கு என்ன நடக்கும் என்று புரிந்து கொண்டேன். இப்பொழுது நீ அளித்த வாக்குறுதியைக் காப்பற்றிக் கொள்வது நன்று. இல்லையேல் இத்தனை காலமாக நீ காப்பாற்றிய நேர்மை உன்னை விட்டு, நீங்கிவிடும். சாஸ்திரங்களின் அழிவால் உலகம் கொஞ்சம் - கொஞ்சமாக சீரழியும். எனவே இலக்குமணனை நாடு கடத்து"- என ஆலோசனை கூறினார்.

இதனைக் கேட்ட இராமர் ஆழ்ந்து ஆலோசித்து விட்டு, சபையோரிடம் "நான் இலக்குமணனை அயோத்தி நாட்டிலிருந்து நாடு கடத்தும்படி உத்தரவிடுகிறேன்"- என்று அறிவித்தார். மந்திரிமாரும் இராமரின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர்.

இலக்குமணன் சரயூநதியின் கரையை அடைந்து, தன் மரணத்தை உறுதிப்படுத்தி யோகத்தில் ஆழ்ந்தான். காலம் கடந்து முதிர்ந்த பிறகு, இந்திரன் இரதத்தில் ஏறி, அங்கு வந்தான். தன் தெய்வீக உடலை விடாமல், கந்தர்வர்கள் பாட, அப்ஸரஸ்கள் நடனமாட, தேவர்கள் பூமாரி பொழிய இலக்குமணன் சுவர்க்கம் அடைந்தான்.

இலக்குமணன் சுவர்க்கம் அடைந்த பின், இராமர் பரதனை அரசனாக அபிஷேகித்து, இராட்சியத்தை ஒப்படைத்து விட்டு, தானும் சுமித்திரா

நந்தனைப் பின்பற்ற ஆவல் கொண்டார். பரதன் அரசாள விரும்பவில்லை. இராமர் இராட்சியத்தைப் பங்கிட்டு, தனது குமாரர்களில் ஒருவரான குசலனுக்கு வடகோசலத்தையும், மற்றைய குமாரனான இலவனுக்கு தென் கோசலத்தையும் கொடுத்தார். அப்போது அருமைப் புதல்வர்களைக் கட்டி அணைத்து, அவர்களுக்குப் பொற்காசுகளும், ஆபரணக் குவியல்களையும், ஆயிரக்கணக்கான இரதங்களையும், எண்ணிக்கையில்லாக் குதிரைகளையும் பரிசாக அளித்தார்.

இராமர் இராஜ்யத்தை விட்டுச் சரயூ நதிஜலத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, பிரமாவும் பிரார்த்தனை செய்தார். எல்லாம் வல்ல பகவானே! நீர் உம்முடைய லீலைகளைப் பூலோகத்தில் முடித்துக் கொண்டு, தெய்வீகமான ஸ்ரீ வைகுண்டத்திற்குத் திரும்புகிறீர்! பல அவதாரங்களை எடுத்தாலும், உம்முடைய திவ்வியமான சரீரம் மாறுவதில்லை. சாக்சாத் நாராயணனின் ஸ்வரூபமாகிய தாங்கள் எல்லாக் காரணத்திற்கும் காரியமாவீர்! மற்றும் உலக ஆதாரமான நீர் எல்லாவற்றிலும் பரவியுள்ளீர்கள்.

இந்நிலையில் பரதன், சத்துருக்கன் என்போரும் பகவான் இராமரின் இருப்பிடமான வைகுண்டத்தை அடைந்தனர். தசரத மன்னரின் மைந்தர்கள் மட்டுமன்றி, இராமரைப் பின் தொடர்ந்த யாவரும் வைகுண்டத்தை அடைந்தனர்.

## முகப்பில்....

உங்கள் **"தென்றல் சஞ்சிகை"** நடாத்திய **"கலாபூஷணம், கலைச் செம்மல்"** மு.தம்பிப்பிள்ளை எழுதிய **"வாழப் பிறந்தவள்"** (சிறுகதைகள்), **"புதுமைப் பெண்", "சுதந்திரப் பறவைகள்"** (நாவல்கள்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவில், நூலாசிரியர் நூலின் முதற்பிரதிகளை மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினத்துக்கு வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.

(படம் + தகவல்:- வ.சக்திவேல்)

# இலங்கையின் பெருமையைப் பறைசாற்றும் புராதன அரைமதி சந்திரக் கற்கள்!



-கலாநிதி சுபாஷினி பத்மநாதன்-

பெரும்பாலான பண்டைய புராதன அரைமதி வடிவான சந்திரக் கற்கள் இலங்கையின் புராதன தொன்மைமிக்க இராசதானிகளான பொலநறுவை, அனுராதபுரம் மற்றும் அபயகிரி ஆகிய பகுதிகளில் செறிந்து காணப்பட்ட போதும், பொதுப்படையில் பௌத்த மதப் பாரம்பரியம் மிகுந்து காணப்படும் பகுதிகளில் காணப்படும் சித்திரங்கள் செறிந்த சித்திரக் கற்களைக் காண முடிகிறது.

இவ்வரைமதி வடிவிலான வாசற்படிகளுக்குக் கீழ் அமைந்துள்ள சந்திரக்கல் அலங்கரிப்பு படிக்கல்லானது வெறும் அலங்காரச் சின்னமாக மட்டும் கருதப்படாதவிடத்தும், தத்துவார்த்த ரீதியில் குறிப்பாக மனித வாழ்க்கையின் பலதரப்பட்ட பரிமாணங்களை எமக்கு எடுத்தியம்பும் கலாசார மனித பண்பாட்டியல்மிக்க கலைக் கூறுகளாகத் திகழ்கின்றன.

பண்டைய காலத்தில் இவ்வரைமதி வடிவான சந்திரக் கற்கள் பண்டைய அரண்மனை வாசற்படிகளிலும், பண்டைய பௌத்த மதக் கோவில்கள், நீர்த் தேக்கங்கள், நீர்நிலைகள் என்பவற்றின் வாயில்களிலும் மற்றும் கருத்தரங்கு மண்டபங்களின் வாசற் படிகளிலும் இவை தவிர அரசர்கள் தம் அதிகாரத்துக்கு உட்பட்ட அதிகாரிகளைச் சந்திக்கும் மாநாட்டு மண்டபப் படிக்கட்டு வாயில்களிலும் அலங்கரிப்பு அரைமதிச் சந்திரக் கற்களை நாம் காண முடிகிறது. அன்று தொட்டு இன்று வரை, இப்பாரம்பரியமானது சிங்களப் பௌத்தமதக் கலை, கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகிறது.

ஆரம்பத்தில் அனுராதபுரத்திலேயே இவ்வரைமதிச் சந்திரக் கற்கள் மிகையாகக் காணப்பட்டன. ஆயினும் அவற்றில் ஆறு வகையான சந்திரப் படிகற்களே உயர்ந்தவையாகக் கருதப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டன.

இவ்வுயரிய சித்திரக் கலையம்சம் செறிந்த சந்திரக் கற்களுக்கு நடுவே அழகிய தாமரை மலர் காணப்படுவதும், குறிப்பிடத்தக்கதாகும். இத்தாமரை மலரைச் சுற்றி நான்கு வகைப் பூதங்கள் சித்தரிப்பு நிறைந்த விலங்கினங்கள் மற்றும் அன்னப்பறவை என்பன இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. அனுராதபுர மாவட்டத்தில் காணப்படும் அரைமதி வடிவிலான சந்திரக் கற்களும், பொலநறுவை மாவட்டத்தில் காணப்படும் அரைமதிச் சந்திரக் கற்களும் அடிப்படையில் மாற்ற முற்றுக் காணப்படுகின்றன. காரணம் பொலநறுவையானது, கணிசமான அளவு இந்துமத ஆதிக்கத்திற்கும், செல்வாக்கிற்கும் உட்பட்டிருந்த ஒரு புராதன இராசதானியாகும். இவ்வகையில் இங்கு காணப்படும் சந்திரக் கற்களில் எருமை உருவமும், ஏனைய சந்திரக் கற்களில் விலங்கினங்களும் காணப்படுகின்றன. ஆயினும் அனுராதபுரப் பகுதியில் காணப்படும் சந்திரப்படி கற்களில் யானை, சிங்கம், குதிரை, எருமை ஆகிய அத்தனை விலங்கினங்களையும் காண முடிகிறது.

இக்கற்களில் இடம்பெறும் யானையானது, பிறப்பினை எடுத்தியம்பு வதாகவும், இவ்யானையைச் சமஸ்கிருதத்தில் **"ஜாதி"** எனக் குறிப்பிடப்பட்டு அழைக்கப்படுவதையும், ஒட்டு மொத்தத்தில் வெறும் பிறப்பினை மட்டுமன்றி, பிறப்பு – இறப்புச் சக்கரத்தையும் வெளிப்படுத்துவதையும் நாம் காணமுடிகிறது. அவ்வாறே **"ஜாறா"** எனக் குறிப்பிட்டு அழைக்கப்படும் குதிரையானது வாழ்வில் வயது முதிர்வையும், இறப்பினையும் குறிப்பிடுவதாக அமைகிறது. இக்கல்லில் பொழியப்பட்டுள்ள சிங்கமானது **"வாதி"** என்றும், வாழ்வில் நோய் நொடிகளைப் பிரதிபலிப்பதாகவும் அமைகிறது. அவ்வாறு எருமையானது **"மரணம்"** என்றும், வாழ்வில் எவ்வுயிர்க்கும் தவிர்க்க முடியாத இயற்கையின் நியதியினை எடுத்தியம்புவதாகவும் கருதப்படுகிறது. மீண்டும் யானையினை இப்படிக் கல்லில் காண்பதன் மூலம் வாழ்வின் பிறப்பு – இறப்புச் சக்கரத்தை 'விளக்குவதாக அமைகிறது. அதனையே **"சம்சாற"** எனக் குறிப்பிட்டு அழைக்கப்படுகிறது.

இவ்வாறே இதில் அன்னப் பறவையானது ஆங்காங்கே சித்தரிக் கப்பட்டுள்ளதனைக் காண முடிகிறது. பாலையும், நீரையும் பிரித்தறியும்

சுபாவம்மிக்க அன்னப்பறவை வடிவமானது இப்படிக்கல்லில் இடம்பெறுவதிலிருந்து வாழ்வில் நன்மையும், தீமையும் ஒருங்கே இடம்பெறுவதையும், மனிதன் இப்பாகுபாட்டை தனது பகுத்தறிவுத் திறன் மூலம் பிரித்து, தன் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதனை எடுத்தியம்புகிறது.

மேலும் இக்கல்லானது மனித வாழ்க்கையில் ஆடம்பரத்தையும், அதேசமயம் கஷ்டத்தையும் ஒருங்கே பிரதிபலிப்பதாக அமைகிறது. இறுதியில் மனிதன் நடுநிலைமையினைக் கையாள்வதன் மூலம் "முத்தி" எனும் பேரானந்த நிலையை அடைய வாய்பளிப்பதை இச்சித்திரக்கல் எடுத்தியம்புகிறது.

இப்படிக்கல்லில் இடம்பெறும் "தாமரை" மலரானது பௌத்த மதத்தில் சிங்கள மக்களின் வழிபாட்டில் முக்கிய இடம் பிடித்துள்ள தாமரை மலரைக் குறிப்பிடுவதாக அமைகிறது. பொதுப்படையில் இன்று வரை பௌத்த கோவில் வழிபாட்டுக்கு தாமரை மலரின் பயன்பாடு, சமன் கடவுளின் கைகளில் தாமரை மலரையும், பௌத்த விகாரைத் தூண்களின் அலங்கரிப்புச் சிற்பமாக இடம்பெறுவதைக் காண முடிகிறது. இவ்வாறு பௌத்தமத வழிபாட்டில் தாமரை மலரின் பயன்பாட்டின் உன்னதத்தினை எடுத்துக் காட்டுகிறது. அவ்வாறே கல்லின் வடிவமைப்பை மேலும் மெருகூட்டும் வண்ணம் செடி, கொடி, இலை, தழை நிறைந்ததாக இச்சந்திரப் படிக்கல் இடம்பெறுகிறது.

எனவே பண்டைய கால அரைமதி சந்திர சிற்பமானது, வெறும் அலங்கரிப்பு நிறைந்த சிற்பமாக மட்டுமன்றி, இன்றுவரை அதன் தத்துவம், தனித்துவம், மகிமை, அருமை, பெருமைகளை அறிந்து – சிங்களப் பௌத்த நாகரீகத்தில் கட்டிட வாசலை அலங்கரிக்கும் வரலாற்றுச் சின்ன ஊடகமாக அரைமதிச் சந்திரக் கற்கள் விளங்குகின்றன.

தென்றலே! நீ அகவை பத்தில் காலடி எடுத்து வைத்துள்ளதை மனம் திறந்து வாழ்த்துகிறேன்.

இவன்

**ம.பிருந்தன்,** வவுனியா.

-சிறுகதை-

# உண்மை உறவு!!!

-களுவாஞ்சியூர் அனோஜா பவளேந்திரன்-



நினைவேட்டினைப் புரட்டியபடியே எந்த மனிதன் வாழ்க்கையிலும் என்றுமே மறக்க முடியாத பள்ளிப் பருவத்தின் கடைசி இரண்டாண்டுகளையும் மனத்திரையில் ஓடவிட்டுக் கொண்டிருந் தாள் மல்லிகையும் வென்றுவிடும் வெள்ளையழகி பவித்திரா.

ஆம், க.பொ.த (சாதாரணதரப்) பரீட்சை முடிவுகள் வெளியாகிய நிலையில், தன் வாழ்க்கைக்கு ஏற்றதாக இத்துறைதான் அமையுமென்று பலமுறை சிந்தித்து, பவித்திரமாக அவள் வர்த்தகத் துறையைத் தேர்ந்தெடுத்தாள்.

அன்று உயர்தரக் கற்கைக்காகப் பாடசாலை சென்ற முதல் நாள்! பல மாணவர்கள் மத்தியிலே பளிச்சென்று மின்னினாள் அந்த வெள்ளையழகி பவித்திரா. ஆளுக்காயள் பரீட்சைப் பெறுபேற்றை அறிவதும், வாழ்த்துக் கூறுவதும், தேர்ந்தெடுத்த துறையை அறிந்து கொள்வதுமாய் இருந்த மாணவர் மத்தியிலே சில மாணவர்கள் புதிதாய்ச் சேர்ந்த மாணவர்களுடன் அறிமுகமாகிக் கொண்டிருந்தனர்.

அன்றுதான் அயல்கிராமத்திலிருந்து முதன் முறையாக உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்காக வருகிறான் நமது கதாநாயகன் ராகவன். பார்ப்பதற்கு மிக அழகானவன். ஐந்து அடிக்கு மேல்தான் அவனது உயரம் இருக்கும். கட்டமைக்கப்பட்ட அவன் உடற்கட்டுக்கள் அவனுக்கு அழகை அள்ளியளித்தன. கண்களிலிருந்து வீசும் ஒளி கண்டவரைக் கவராமல் இருக்கவா போகிறது. அப்படி ஓர் அழகன். பதினாறு வயதின் பருவ மாற்றத்திற்கு இந்த மாணவிகள் என்ன விதிவிலக்கானவர்களா? அவன்அழகை ரசிப்பதும், பலவாறு தங்கள் நண்பிகளுடன் பேசுவது மாயிருந்தனர். இவன் அழகிற்கு ஏணி வைத்தும் எட்ட மாட்டோம் - என்று **"எட்டாக் கனிக்குக் கொட்டாவி விட்டாற் போல்"** ஆயினர் சிலர்.

மறுநாளிலிருந்தே அழகன் ராகவனிற்கு காதல் கடிதங்கள் குவியத் தொடங்கின. ஏதோ தொலைந்த ஒன்றைத் தேடுபவன் போல அவற்றைப்

பிரிப்பதும், படிப்பதுமாக இருந்தான். உண்மையிலேயே அவன் இதயத்தைத் தொலைத்து விட்டான். புரியவில்லையா? பருவத்தில் பறக்கும் காதல் பட்டாம்பூச்சி அவனுக்குள்ளும் பறக்க ஆரம்பித்து விட்டது. புதிய பள்ளியிலே அவன் கண்ணிற்பட்ட முதற்பெண் நமது நாயகி பவித்திராதான். தன்னுடைய இதயத்தை அவளிடமே பறிகொடுத்து விட்டான். அவளிடமிருந்து ஏதாவது கடிதங்கள் வராதா? என்ற தேடலுடன்தான் அவற்றைப் படித்து வந்தான்.

பல நாட்களாகியும் அவனது தேடல் தோல்வியிலே முடிந்தது. பொறுமை இழந்த ராகவன் தன் காதலை பவித்திராவிடம் கூறிவிடலாமென்ற முடிவுக்கு வந்தான்.

புதிய இடத்திற்கு வந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. படிப்பின் ஆரம்பம் கூட, அவன் இன்னும் அறியவில்லை. இப்படியிருக்க, காதற் பாடத்தின் கடைசியத்தியாயம் கற்பவன் போலாகி விட்டான்.

தினமும் பவித்திராவின் வரவிற்காகக் காத்திருந்த அவன் ஒரு முறை "பவித்திரா, நான் உங்ககூடக் கொஞ்சம் பேசணும்.. அதனால ஓப்பிணாகவே சொல்லிடுறன். இதுதான் உங்கிட்ட பேசுற முதல் தடவை. தப்பா எடுக்காதீங்க.. என் மனசில தோணுறதைப் பட்டென்று சொல்றன். எனக்கு உன்னப் பிடிச்சிருக்கு.. உன்ன நான் காதலிக்கிறன். நீ இல்லாம என்னால வாழ முடியாது"- என்று படபடவென்று பேசினான் ராகவன்.

முதன்முறையாக ராகவனுடன் பேசிய பவித்திராவுக்கு அவனுடைய இப்பேச்சு வியப்பளித்தது. இப்படி ஆயிரம் ஆண்களின் வார்த்தையைக் கேட்ட அவளுக்கு அவனுடைய பேச்சு ஒன்றும் புதிதல்ல. என்னவோ தெரியவில்லை, ராகவன் மீது இனம் புரியாத இரக்கம் அவளுக்கு. அந்த அழகனவன் காதல் வலையில் விழ, அவளுக்கு ஏனோ இஷ்டமில்லை. ஆனால் அவன் தன்னிடமிருந்து எதிர்பார்க்கும் அந்த அன்பை அவளால் அளிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

"உங்க பேர் என்ன?" - என்று கொஞ்சு தமிழில் கெஞ்சுதலாகக் கேட்டாள் பவித்திரா. "ஏ.. என் பேரு ராகவன்" - என்று தட்டுத் தடுமாறிப் பதிலளித்தான் காந்த சக்தி வாய்ந்த அவளது ஒலியிலிருந்து தப்ப முடியாதவனாய்......

"ஓ" ராகவன், ரொம்ப ரம்மியமான பெயரா இருக்கு. காதலிக்கிறது ஒன்றும் தப்புக் கிடையாது. இப்ப வர்ற காதல் சாதாரணமானது. வரும்.. போகும்.. நீங்க எங்கிட்ட இருந்து எதிர்பார்க்கிற அந்த அன்பை காதல் என்கிற பேரிலதானா தரோணும்? மற்றப் பொண்ணுங்க மாதிரி அவசரப்பட்டு,

அவஸ்தை தருகிற முடிவை நான் எடுக்கல்ல. நீங்க எதிர்பார்க்கிற அன்பை காதல் என்கிற அர்த்தம் இல்லாமல், தூய்மையான நட்பா என்கிட்ட இருந்து எடுத்துக்கலாமே"- என்று வயது முதிர்ந்தவள் போல அறிவுரை கூற ஆரம்பித்தாள் பவித்திரா.

பவித்திராவிடமிருந்து இந்த மாதிரி பதில் கிடைக்குமென்று அவன் கனவிலும் எண்ணவில்லை. இதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. அதுதான் ஏற்கனவே சொல்லிவிட்டாளே.., அவன் அழகன் என்றும், பல பெண்களின் மனதைக் கவர்ந்தவனென்றும்.. இந்தக் கர்வம் பவியிடமிருந்தும் நல்ல பதிலையே எதிர்பார்க்கச் செய்தது. ஆனால், அவன் தேடிய அன்பை தூய்மையான நட்பில் தருவதாக வாக்குறுதி அளித்த பவியின் நல்லெண்ணத்தை அவனால் தட்டிக் கழிக்கவும் முடியவில்லை. ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. அவ்விடத்தை விட்டு, மெதுவாக அகன்று விடுகிறான். பவித்திராவும் வழமை போல் தன் வேலைகளை தொடர்வதற்கு ஆயத்தமானாள்.

மறுநாட்காலை தினமும் ராகவன் இருக்குமிடம் சூனியமாய் இருந்ததைக் கண்ட பவி, அவன் ஏதோ தப்பான எண்ணத்துடன் தான் இப்பொழுதும் இருக்கிறான். அவனது இந்த நிலை தப்பான பாதைக்கே இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து அவனைத் தேடிச் சென்றாள். வகுப்பறையில் தனியான பகுதியில் தனிமையில் உட்கார்ந்திருந்த ராகவனைச் சற்று நேரம் உற்றுப் பார்த்து விட்டு, அவளே பேச்சைத் தொடங்கினாள். "என்ன ராகவன் என் முடிவில் ஏதும் தப்பிருக்கா..? இல்லையே, உங்க ஊரில இருந்து மிகுந்த கற்பனைகளோட, டாக்டர் ஆக வேண்டுமென்ற ஆசையோட படிக்க வந்த நீங்க இந்த மாதிரி வழிதவறிப் போகப் பார்க்கலாமா? காதலிச்சிட்டுப் படிக்கிறவங்க இருக்காங்கதான், ஆனா.. நமக்குள்ள அப்படியொரு உறவு வேணாம். உங்க குடும்பத்தவங்களோட ஆசை நிறைவேறுற மாதிரி முதல்ல 'டாக்டர்' ஆகுங்க. அந்தக் கால எல்லைக்குள்ள வாழ்க்கையில் ஆயிரம் மாறுதல்கள் வரலாம். என்னைவிட நல்ல பொண்ணுங்களா ஆயிரம் பேரச் சந்திக்கலாம். அப்போ இதெல்லாம் ஏதோ போலி மாதிரிப் புரியும். 'மெடிசின்' என்ர பண்ணக்கூடிய ரலண்ட் உங்ககிட்ட இருக்குது. வயச மீறின கற்பனைகள வளர்த்து நேரத்தைப் பாளாக்காம, படிப்பில மட்டும் கவனமா இருங்க. நானும் 'யூனிவர்சிட்டிக்கு' என்ர பண்ணோணும் என்று நிறைய ஆசைகளோட இருக்கன். நாம என்றைக்கும் நல்ல நண்பர்களாய் இருப்போமே..."- என்று அவனுடன் கைகுலுக்குவதற்காகக்

கையை நீட்டினாள்.

பவித்திராவின் இப்பேச்சு அவனுள் புதுமாறுதலை ஏற்படுத்தியது. அவனது கடமையை ஞாபகப்படுத்தியது. அவனது குடும்ப ஆசையை முன்நிறுத்தியது. புதுப் பொலிவுடன், புது மனிதனாய்.. கையைக் கொடுத்தான் ராகவன்.

தினமும் "குட் மோர்ணிங்" சொல்வதுடன் ஆரம்பித்த, இவர்களது நட்பு தூய்மையான முறையிலே நாளொரு மேனியும், பொழுதொரு வண்ண முமாக வாடாத மலராக மலர்ந்தது.

தவணைப் பரீட்சைகளிலெல்லாம் இருவரும் முதலிடம்தான். ஒருவருக்கொருவர் உள்ள குறை - நிறைகளைப் பரிமாறிடுவர். இருவரும் இருவரதும் வீட்டிற்கும் செல்வர். இவர்களிடம் உருவான தூய்மையான நட்பு குடும்ப நட்பாகி வளர்ந்தது. மற்றவர் கண்டு பொறாமை கொள்ளும் அளவுக்கு மாறியது. நட்பின் புனிதம் தெரியாத மனிதர்கள் சிலர் காதல் என்றும் கதைப்பதுண்டு. ஆனால் அவற்றையெல்லாம் இவர்கள் புலப்படுத்துவதேயில்லை.

இவ்வாறு தூய்மையான நட்புடன், கல்வியில் மட்டும் கவனம் செலுத்திய நிலையில் பரீட்சைக்குரிய காலமும் நெருங்கியது. பள்ளிப்பருவ நினைவுகளை அள்ளி அனுபவிப்பதற்காக நினைவேடுகளை நீட்டிய வண்ணமே மாணவர்கள் இருந்தனர். இதற்கென்ன பவி மட்டும் விதிவிலக் கானவளா? அவளுந்தான் நினைவேட்டினை நீட்டி, நீங்காத நினைவுகளைப் பொறித்தெடுத்தாள். அந்த நினைவேட்டினை இன்று புரட்டி, தன் நண்பர்களின் பள்ளிப்பருவ நினைவுகளை நீட்டிப் பார்க்கிறாள். இப்போது அவளது விரல்கள் வருடுவது ராகவன் பொறித்த சில வரிகளை......

**"என் கடமையை**
**நினைவுபடுத்தி - என்னை**
**நிலைப்படுத்தியது உன் நட்புத்தானே....**
**நினைவேட்டில் பொறித்தால் தானா - நம்**
**நட்பு நிலைத்திருக்கும்....?"** - என்று தொடர்ந்த கவிவரிகளும், பதித்த சில அனுபவங்களுமே இத்தனை எண்ணங்களை மீட்டிப் பார்க்கக் காரணமாயிருந்தது.

பள்ளிப் பருவத்தின் இத்தனை நாட்களை ஞாபகப்படுத்திய அவளுக்கு, கடைசிச் சொற்ப நாட்களையும் விட்டுவிட, விருப்பமில்லை. தினமும் சிரித்துப் பேசிய நண்பர்கள் அழுவதையே தம் தொழிலாகக் கொண்டிருந்த வேளையில், "சேர்ந்திருக்கும் மிகச் சொற்பமான நாட்களில் அழுது புலம்பிக்

காலத்தைக் கழிக்காமல், வழமை போல் சிரித்து மகிழ்வோம்" - என்று சிலர் தம் வேதனையை அடக்கிச் சிரிப்பதை நினைத்துப் பார்த்த அவளது கண்களிலிருந்து நீர் வடிந்து, நினைவேட்டை நனைத்ததைக் கூட அறியாமல் பள்ளி நினைவுகளிலே மூழ்கியிருந்தாள்.

பள்ளி வாழ்க்கையில் மிகமிக முக்கியமான நாள். எல்லா நண்பர்களும் இறுதியாக ஒன்று கூடும் தினம். அதுதான் பிரியாவிடை நாள். மாணவர்கள், ஆசிரியர்கள் என்று வித்தியாசமின்றிச் சந்தோசமாகக் கழிக்கும் தினம். தம் பிரிவை மறந்து, சந்தோஷமாகக் கரகோசித்து, அர்ப்பணிக்கும் நேரம். நகைச்சுவை நிறைந்த மேடை நிகழ்வுகளும், ஒன்றாக உண்ணும் மதியபோசனமும் அவர்களுடைய பிரிவை மறக்கச் செய்தது. நண்பர்களுடன் புகைப்படங்களும் எடுக்கப்பட்டன. நிகழ்வு முடிந்து, வீடு திரும்ப ஆயத்தமான நேரம், மாணவர்கள் ஆசிரியர்களிடம் ஆசீர்வாதம் பெற்றனர். எங்கிருந்துதான் பிரிவின் கொடூரம் ஞாபகத்துக்கு வந்ததோ தெரியவில்லை. நயனங்கள் நனையாத மனிதர்களே அவ்விடத்தில் இல்லையென்றே சொல்ல வேண்டும். இந்த நிமிடத்திலிருந்து பூமி சுழலாமல் இருக்காதோ என்று பிரார்த்தித்தனர். இயற்கையின் நியதி விலகாமல், அவர்களது கண்ணீரைக் கூடப் பொருட்படுத்தாமல், சூரியனும் மேற்கே சென்று கொண்டிருந்தான்.

"இந்த உலகம் போலியானது. நட்பு என்பது அதில் நடக்கும் நாடகம். அதனால் தான் நமக்குள்ளே பிரிவு வருகிறது"- என உணர்ச்சி வசப்பட்டு, அழுத மாணவர்கள் மத்தியிலே "பின்னைய சந்ததி இவ்விடத்தில் கற்பதற்காகவும், உயர் கல்வியைத் தொடர்வதற்காகவும் நம் நட்பை விட்டுக் கொடுப்போம்" - என்று ராகவனின் குரல் ராகமாய்க் கேட்டது.

பாடசாலையும் முடிந்தது. பிரிவின் வலியைக்கூட மறந்து, முழுமையாகப் படிப்பில் மட்டும் கவனஞ் செலுத்திய மாணவர்கள் உயர்தரப் பரீட்சையும் எழுதி, முடிவுக்காகக் காத்திருந்தனர்.

மூன்றரை மாதங்கள் கழிந்த நிலையில், பரீட்சை முடிவுகள் வெளியாகின. மாவட்ட ரீதியில் மூன்றாம் இடம்பெற்று ராகவன் மருத்துவ பீடத்திற்கும், மாவட்ட ரீதியில் முதலாமிடம் பெற்றுப் பவித்திரா வணிக முகாமைத்துவப் பீடத்திற்கும் தெரிவாகி, தம் உயர்கல்வியைத் தொடர்கின்றனர்.

இவர்களது நட்பு இன்றும் தூய்மையான முறையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. வாழ்வின் யதார்த்தத்தை உணர்ந்த இவர்களது நட்பு ஏழேழு ஜென்மம் கடந்தாலும் கலங்காது, மங்கலமாய்த் தொடரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**அதிசயம் ஆனால் உண்மை**

# வாழ்க்கையில் ஒரு முறை வரும்
# அபூர்வ பெப்ரவரி மாதம்!

சகல தினங்களும் 4 நாட்களே. 823 வருடங்களுக்கு ஒரு தடவையே இவ்வாறு வரும். வாழ்க்கையில் ஒரேயொரு தடவை வரும் அபூர்வ பெப்ரவரி மாதம் இவ்வருடத்தில் வந்த பெப்ரவரி மாதமாகும். அதிலென்ன விஷேடம் என்று கேட்கிறீர்களா? ஆம், விஷேடம் இருக்கிறது.

இந்த மாதத்தில் வந்த அனைத்து தினங்களும் 4 நாட்கள் தான் வந்தன. அதாவது திங்கள் - 4நாட்கள், செவ்வாய் - 4நாட்கள், புதன்- 4நாட்கள், வியாழன்- 4நாட்கள், வெள்ளி - 4நாட்கள், சனி- 4நாட்கள், ஞாயிறு- 4 நாட்கள். இவ்வாறு 4 தினங்கள் மாத்திரம் வரும் பெப்ரவரி 823 வருடங்களுக்கு ஒரு தடவைதான் வரும்.




எம்மைப் பொறுத்தவரையில் வாழ்க்கையில் ஒரு தடவை தான் இதனை அனுபவிக்கலாம். சமகாலத்தில் உலகில் வாழ் வோருக்கு இந்தப் பெப்ரவரியை நுகர வாய்ப்பு ஏற்பட்டது அவ்வளவுதான். வாழ்க்கையில் இனி ஒரு தடவை வராது. இவ்வாறான பெப்ரவரியைச் சீனர்கள் "பணப்பை"என்று அழைப்பார்களாம்.

# அழகுக் குறிப்பு

திருமதி. கவிதா கிருபாகரன்




**தேவையான பொருட்கள்**

- எலுமிச்சைச் சாறு - ஒரு தேக்கரண்டி
- கிளிசரின் - 2ஸ்பூன்
- ரோஸ் வோட்டர் - 3 ஸ்பூன்



**செயன்முறை:-**

இவை எல்லாவற்றையும் ஒன்றோடொன்று கலந்து கொள்ளுங்கள்.

**பயன்படுத்தும் முறை:-**

இரவில் தூங்குவதற்கு முன் கால்களை நன்றாகக் கழுவிக் கொண்டு, பின்னர் இந்தக் கலவையைப் பாதங்களில், தடவுங்கள். இவ்வாறு செய்தால் ஒரு சில நாட்களில் வெடிப்புக்கள் மறைந்து விடும்.

– பழுவூரான் –

# நீத்தார் நினைவு

## எழுத்துலகில் தடம் பதித்த

## அமரர். க. சபாரெத்தினம் !!!!



மட்டக்களப்பு மாவட்ட நவீன இலக்கியத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் தனது பன்முக எழுத்தாற்றலால் தடம் பதித்தவர் அமரர் க.சபாரெத்தினம் எனக் கூறினால் அது மிகையாகாது. இவர் சிறுகதை, பிரதேச வரலாறு, கவிதை, சிறுவர் பாடல், நாடகம், மொழி பெயர்ப்பு எனப் பல்வேறு துறைகளில் தடம் பதித்த பன்முக ஆளுமை கொண்டவர். இவர் மொஸ்கோ அனுபவங்கள், இதயத் தாமரை, ஏற்றம் இறக்கம், நல்வழி, ஆரையம்பதி மண், இந்து மதத்தின் இன்றைய தேவைகள் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இவற்றில் **"மொஸ்கோ அனுபவங்கள்"** என்ற நூலின் ஊடாக தமது அனுபவப் பகிர்வுகளை வெளிப்படுத்தினார். இந்நூலின் வரவால் ஆரையம்பதிப் பிரதேசத்தின் அருமை, பெருமைகள் உலகளாவிய அளவுக்கு பேசப்பட வழிசமைத்தவர்.

இவர் கலாபூஷணம் விருது, முதலமைச்சர் விருது, மண்முனைப் பற்றுப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை வழங்கிய கலைஞர் கௌரவம் உட்படப் பல்வேறு விருதுகளையும் தனது பன்முக ஆற்றலால் உரித்தாக்கிக் கொண்டவர்.

இவ்வாறாக ஆசிரியராக, பொது எழுதுனராக, தூதரக அதிகாரியாக, நாடக நடிகராக, எழுத்தாளராக தனது பன்முக ஆளுமையால் முத்திரை பதித்த கணபதிப்பிள்ளை சபாரெத்தினத்துக்குத் **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# 5 கேள்வி பதில்

**இல: -06-**

1. மீன்கள் சுவாசிக்க உதவும் உறுப்பு எது?
2. பிரிமா ஆலை அமைந்துள்ள இடம் எது?
3. நெத்தலி மீனில் காணப்படும் போசணைக் கூறு எது?
4. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா யாது?
5. முனிவர்கள் வாழும் இடம் எது?



## விதிகள்:

01. இப் போட்டியில் சகலரும் பங்கு கொள்ளலாம்.

02. இப்போட்டியில் பங்குபற்றுவோர் கீழ் உள்ள கூப்பனில் விடைகளை எழுதி, நிரப்பி ஆனி 03 ஆம் திகதிக்கு முன்னர் **"5 கேள்வி – 6 பதில்", "தென்றல்"** 44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

03. கூப்பன் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. வெற்றியாளர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

05. வெற்றிபெறுவோருக்கு முதல் பரிசாக 500/= வும், இரண்டாம் பரிசாக 300/=வும், மூன்றாம் பரிசாக 100/=வும் அனுப்பி வைக்கப்படும்.

**5 கேள்வி - பதில்**
**இல- 05 விடைகள்**

1.
2.
3.
4.
5.

பெயர் :- ..........................................................................................

முகவரி :- ..........................................................................................

..........................................................................................

# 5 கேள்வி பதில்

## இல: 05 விடைகள்

1. ஒக்டோபர்–01
2. மணப்புழு.
3. காட்டுச் சேவல்.
4. சித்திரை.
5. தபுதாரன்.

## பரிசில் பெறுவோர்

**முதலாம் இடம்**

**த.பிரியா**
4, கூமாங்குளம்
வவுனியா.

**இரண்டாம் இடம்**

**த. அகிலா**
சாகாமம் வீதி.
அக்கரைப்பற்று.

**மூன்றாம் இடம்**

**திருமதி. கீதாசினி தியாகரன்**
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வவுணதீவு.



## பாராட்டுப் பெறுவோர்

1. தி.ஷலோம் ஜெரேமியா - மட்டக்களப்பு.
2. ரமேஸ்குமார் சயனிக்கா - கல்லடி.
3. க.தங்கராசா - ஆரையம்பதி.
4. வி.சுருதி - திருகோணமலை
5. ம.நதியா - காரைதீவு.

ஆரையம்பதியில்....

அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி



## அபிராமி ஜீவல்ஸ்






பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329

AD/0008

அழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி



## சொர்ணம் நகை மாளிகை

AD/0040

16. புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152

212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860

59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191

# Ladshana Stamp

**-Computer Rubber Stamp Maker-**





**# 39A, Baily Road, Arasady, Batticaloa.**

**Tel: 065 222 4048, 077 69 155 74.**
**e-mail: ladshana@gmail.com**

AD/0024

# Headway
## School of Languages




**Headway School of Languages**

New Ancheneye Complex, Arasady, Batticaloa

T: 065 492 4042 | 065 222 5612 | 070 334 4445

வணசிங்கா பிரிண்டர்ஸ் 496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.